1295

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



BOOKS
MADRAS

செய்திகள்

பொன்னான பொன்விழா

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் பட்டத்துக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. சின்னஞ் சிறு வயதில், பள்ளியில் படிக்கும் பருவத்தில் அவர்கள் கலவை என்னும் ஊரில் பட்டம் ஏற்றார்கள். இப்பொழுது ஞான ஒளியாகத் திகழும் அப்பெருமான் பல மொழிகளிலும் பாண்டித்தியம் உள்ளவர்கள். அவரை ஒரு முறை நேரில் தரிசித்தவர்கள் எத்தனையோ அருளும் ஒளியும் பெற்றிருக்கிறார்கள். திருப்பாவை, திருவெம்பாவை, திருமறை ஆறங்க மகாநாடுகள் முதலியவற்றைத் தொடங்கி, தமிழ்நாடெங்கும் மார்கழி மாசத்து விழாவாகச் செய்திருக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளுக்கும் அறிவும் பக்தியும் பெருகுவதற்காகப் பலவாறு முயலுகிறார்கள். அவர்கள் பட்டம் ஏற்று வருகிற மார்ச்சு மாதம் 14-ஆம் தேதியுடன் ஐம்பதாண்டுகள் ஆகின்றன. அந்த நாளில் நாட்டின் பல பாகங்களிலும் விழாக்கள் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த விழாக்களில் கல்விச் செல்வமும் ஞானச் செல்வமும் வளர்ந்து தழைக்க, சிறுவர் குலமெல்லாம் அங்கங்கே கலந்துகொள்ள வேண்டுகிறோம். அந்தப் பொன் விழா வைபவத்தை முன்னிட்டு அடுத்த இதழில் ஸ்ரீ ஆதிசங்கரரைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளிவருகிறது.

நாடகக் கலை வளர்த்த பெரியார்

தமிழ் நாடகங்கள் நூற்றுக்குமேல் எழுதி, தமிழ் நாடகக் கலைக்கே புத்துயிரூட்டியவர் ஸ்ரீ பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள். நாடகத் தமிழ் வளர்த்த இப் பெரியாருக்கு இப்போது 85 வயது ஆகிறது. சென்னையில் சுகுணவிலாச சபை என்று ஒரு குழுவை நிறுவி, நாடகக் கலைக்கு ஒரு கௌரவமும் மதிப்பும் தேடித் தந்தவர். சிறந்த சிந்தனையாளர். பெரிய அறிஞர். அவருடைய 85-ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, சென்னை நகராண்மைக் கழகம் அன்னாரைப் பாராட்டி அணி செய்தது.

சிறுவர்கள் நகரம்

சென்னை ஒய். எம். ஸி. ஏ. சிறுவர் நகரத்திற்கு, சென்னை கவர்னரின் மனைவி ஸ்ரீமதி ஜான் அவர்கள் விஜயம் செய்தார். ஒய். எம். சி. ஏ. நகரச் சிறுவர்கள் அணிவகுப்பு மரியாதையுடன் விருந்தினரை வரவேற்றனர். பிறகு வண்ணாரப்பேட்டையிலும் தண்டையார்ப் பேட்டையிலும் உள்ள ஏழைக் குழந்தைகள் விடுதிக்கும் பாதுகாப்புச் சங்கத்துக்கும் அவர் விஜயம் செய்தார்.

ராணுவத்தில் ஒரு டார்ஸான்

இருபத்து நாலு வயதுள்ள ஜானக்சிங் என்பவர் இந்திய ராணுவத்தில் சமீபத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். அம்பாலாவிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த இவருடைய உயரம் 7 அடி. மார்பின் அகலம் 41 அங்குலம்; எடை 220 பவுண்டு. பார்ப்பதற்கு டார்ஸான் போலவே இருக்கும் இவர் ராணுவத்துக்குப் பொருத்தமான பேர்வழி என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

இந்தியாவின் இரண்டாவது பொதுத் தேர்தல்

21 வயது முடிந்த எல்லா ஆண் - பெண்களுக்கும் இந்த நாட்டில் ஓட்டுரிமை உண்டு. சென்ற தேர்தல் 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற போது கிட்டத்தட்ட பதினேழரைக் கோடி வாக்காளர்கள் இருந்தார்கள். இப்போது நடைபெறும் தேர்தலில் 19.3 கோடி வாக்காளர்கள் ராஜ்யங்களின் சட்ட சபைக்கும் மத்திய பார்லிமெண்டு (லோக சபா)க்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 5

1 - 3 - '57

குழந்தைகளே! பக்கம் 2
தபால் பெட்டி .. 3
காட்டில் தேர்தல் .. 5
அந்தச் சிலை .. 7
துறுதுறுப்பை .. 13
ஏக்தின் கா முதலாளி .. 17
பாட்டரி அடுக்கு .. 22
விடுகதைப் பாட்டு .. 24
நல்ல நண்பன் .. 25
சைனு சு - சூ! .. 29
முகமூடித் திருடன் .. 35
நீங்களும் நானும் .. 39
அட்டைப் படம்:
N. ராமகிருஷ்ணு
செய்திகள் - 2-அட்டை
பேனு நண்பர்கள் - 3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

சீப்பின் கதி!



குழந்தைகளே!

கண்ணனில் இப்போது வெளிவரும் 'அந்தச் சிலை' என்ற தொடர் கதையைப் பலரும் பாராட்டி வருவதைக் கண்டு மகிழ்கிறேன். சைனு சு-சூ முடிந்ததும் தமிழ் வருஷப் பிறப்பு இதழில் முதல் பரிசு பெற்ற மற்றொரு தொடர்கதை ஆரம்பமாகும்.

வழக்கம் போல் பெரிய விடுமுறையின்போது புதிய தொடர் கதைப் போட்டியை அறிவிக்கிறோம். சித்திரப் போட்டியையும் பரீட்சையெல்லாம் முடியும் சமயத்தில் வெளியிடலாம் என்று எண்ணி யிருக்கிறோம். பரீட்சை நெருங்குவதால் உங்கள் பாடங்களைத் தவிர வேறு எதிலும் உங்கள் கவனத்தைத் திருப்ப நாங்கள் விரும்பவில்லை.

'நீங்களும் நானும்' என்ற பகுதி ஆரம்பித்தது முதல் உங்களுடைய சுறுசுறுப்பை என்னால் உணர முடிகிறது. இந்தப் பகுதியைப் பற்றித் தெளிவாகக் கூறியிருந்தும் பலர் சில பேருடைய சொந்த வாழ்க்கையைப்பற்றியும் விவரங்களைப் பற்றியும் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம். பிறருடைய தனிப்பட்ட விவகாரங்களையெல்வாம்பற்றிக் கேட்பதும் தவறு; பதில் கூறுவதும் இயலாது. என்னுடைய பதிலில் நகைச் சுவை கலந்திருக்க வேண்டும்; அதே சமயம் ஆழ்ந்த கருத்துப்பொதிந்திருக்க வேண்டும்: சரியான விவரங்களைத் தெரிவிப்பதாக இருக்கவேண்டும்; மனத்தில் தோன்றும் சந்தேகங்களை விலக்குவதாக இருக்கவேண்டும். உங்களுக்குப் பயன்படும்படியும் இருக்க வேண்டும்: இதுவே என் விருப்பம். வர வர, நான் எதிர்பார்க்கிற விதத்திலேயே கேள்விகள் வருவதைக் கண்டு உற்சாக முறுகிறேன். நீங்கள் கேட்கும் பல கேள்விகளுக்கான விடைகள் எனக்கே மறந்து போயிருக்கின்றன; அல்லது தெரியாமல் இருக்கின்றன. அவற்றை மீண்டும் சரிபார்த்து ஆராய்ந்து தான் எழுதவேண்டி யிருக்கிறது. உங்களை வெறுமே சிரிப்பூட்டுவதில் மட்டும் உபயோகமில்லை; அதனோடு உண்மையைப் புலப்படுத்துவதே நல்லது. அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன். கேளுங்கள்! உங்களுக்குத் தோன்றுவதையெல்லாம் கேளுங்கள். வேடிக்கையாக, சூடாக, கடினமானதாக, எப்படி வேண்டுமானாலும் கேட்கலாம்.

கண்ணன் தபால் பெட்டியில் உங்களுக்கு விருப்பமானதைப்பற்றியெல்லாம் எழுதலாம். வேடிக்கைக் கணக்குகள், சின்னப் பாட்டுகள், சிறு துணுக்குகள் எல்லாம்கூட எழுதலாம். உங்கள் கடிதங்கள்கூட நீங்கள் எதிர்பாராதபோது இந்தப் பகுதியில் வெளியாகி விடவும் கூடும். கதைகளைக் காரசாரமாகக் கண்டித்தும் எழுதலாம்; போற்றியும் எழுதலாம். பலவற்றிற்கு என் பதிலையும் அதனோடு எதிர்பார்க்கலாம். பொதுவாக உங்களுடைய சொந்தப் பகுதியாக எண்ணி, அதைச் சுவையாகச் செய்வது உங்கள் பொறுப்பு.

கண்ணனில் எப்போதும் நல்ல கதைகள், பாடல்கள் வெளிவருகின்றன. மாணவரும் எழுதுகிறார்கள்; பெரியார்களும் எழுதுகிறார்கள். குழந்தைகளுக்கு ஏற்ற கவிதைகளை யார் வேண்டுமானாலும் எழுதலாம். கவிஞர்கள், ஆசிரியர்கள் அவ்வப்போது எழுதுவதால் பலர் தாமே கவிதை இயற்ற முன் வருகிறார்கள். அதில் சிலர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்; பலர் கவிதைகளைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். இதெல்லாம் தமிழ் நல்ல முறையில் கிளைத்து வளருவதைக் காட்டுகின்றன. மொழி சிறந்து விளங்குகிறது என்றால் நம்முடைய வாழ்க்கையும் சிறப்பாக விளங்குகிறது என்பதுதான் பொருள்.

கண்ணன் படிக்கும் குழந்தைகள் மொழி அறிவில் சிறந்து நிற்கிறார்கள். நல்ல குணமும் பண்பும் அவர்களிடம் உருவாகி வருகின்றன. இதை நான் உணருகிறேன்; உணர்ந்து பெருமைப்படுகிறேன்.

—ஆசிரியர்.



பரிசு கேட்கும் கடிதம்

கன்னன் அன்னவே,

நான் கதை எலுதி வைத்திருகிறன். அதுவை உங்லுக்கு அனு பட்டா. உன்கல் பத்தரகியில் அச்சடிபீர்கலா? பரிஸ் தரவிர்கலா?

—கு. நடராசா, மேல்மங்கலம்.

(அருமைத் தம்பியே! உன் கதையை, கண்ணன் தாங்காது. தாங்கினாலும் அதற்கு ஏற்ற பரிசு என்னிடம் இல்லை. ஆ-ர்.)

துணுக்கு

சைக்கிள்காரர்: தம்பி, இந்தச் சைக்கிள் காற்றைப் பிடுங்கிவிட்டது யார், தெரியுமா?

தம்பி: தெரியும்.

சை. காரர்: யார் அது?

தம்பி: அவனை ஒன்றும் செய்யமாட்டீர்கள் என்றால் சொல்கிறேன்.

சை. காரர்: சரி; சொல்லு.

தம்பி: நான்தான்!

சை. காரர்: அட நீதானா? அப்படியானால் நான் இப்போது வேறு ஒன்று செய்யப் போகிறேன்.

தம்பி: அது என்ன?

சை. காரர்: நீ தட்டமாட்டாய் என்றால் சொல்கிறேன்.

தம்பி: சரி, சொல்லுங்கள்.

சை. காரர்: இந்தா 'பம்பு'. நீயே அடி, காற்றை!

—ஏ. எஸ். வி., பிராட்டியூர்.

கவிதை

(1) வீணை சொல்லும் நாதமே
விண்ணை எட்டச் செய்யுமே
பானை போடும் தாளமே
பாட்டினோடு இசையுமே!

(2) வேணு பாடும் பாட்டுக்கு
வீணை நாதம் செய்யுதே
பானு பாடும் பாட்டுக்கு
பானை தாளம் போடுதே!

(3) பாட்டி லின்பம் காணுவோம்
பாடலோடு ஆடுவோம்.
பாட்டு ஆட்டம் இரண்டுமே
பாலர் அடையும் இன்பமே!

—நிலவரசு, தேனி.

காட்டில் தேர்தல்

காட்டிலுள்ள மிருகமெல்லாம்
ஒன்று கூடின
கண்ணியமாய்த் தலைவர்தேர்தல்
நடத்த நினைத்தன
ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்க
முடிவு செய்தன
ஒன்பதுபேர் 'நாமினேஷன்'
தாக்கல் செய்தனர்
சிங்கம்புலி கரடியோடு
யானை நின்றதாம்
சிறுத்தைப்புலி காளையோடு
ஒட்டைச் சிவிங்கியாம்
பொங்குகின்ற ஆசையிலோர்
கழுதை நின்றதாம்!
போட்டிபோட்டுக் கொண்டுஒரு
நரியும் நின்றதாம்!
போட்டிபோடும் மிருகமெல்லாம்
தனித்தனி யாகக்
காட்டிலுள்ள ஓட்டர்களைக்
'கான்வாஸ்' பண்ணின!
கூட்டம்போட்டு ஒன்றையொன்று
தாக்கிப் பேசின
குல்மால்செய்து ஜயிக்கச்சில
திட்டம் போட்டன!

சிங்கம்:

மிருகராஜ னாகமுன்பு
சேவை செய்தவன்
மோசமான பகையைவெல்ல
ஆற்ற லுள்ளவன்
மிருக பலத்தில் என்னை ஜயிக்க
எவர் இருக்கிறார்?
மேன்மையான உங்கள் ஓட்டை
எனக்கே போடுவீர்!

புலி:

வரிவரியாய் மேனிநல்ல
வாளிப் பானது
வடிவழகும் வலியுடலும்
வாய்த்த வீரன்நான்
உரிமையான உங்கள் ஓட்டை
எனக்குப் போடுவீர்
உயர்ந்தவாழ்வு அடைய என்னைத்
தலைவ ராக்குவீர்!

காளை:

நாட்டிலுள்ள மனிதருக்குச்
சேவை செய்தவன்
நாணயமாய் வாழ்வதிலே
நாட்டம் கொண்டவன்
காட்டிலுங்கள் வாழ்விலின்பம்
தழைத்து ஓங்கிட
கண்டிப்பாக உங்கள் ஓட்டை
எனக்கே போடுவீர்!

போட்டிபோடும் மிருகமெல்லாம்
இப்படியாகப்
பொதுத்தேர்தல் கூட்டம்போட்டுப்
‘போர்’ அடித்தன!
காட்டில் தேர்தல் கடைசியாக
முடிந்து விட்டது
கவலையோடு முடிவைக் கேட்கக்
காத்திருந்தன
ஆற்றலுள்ள சிங்கத்திற்கே
வெற்றி கிடைத்ததாம்!
ஆரவாரம் காட்டை எங்கும்
அதிரச் செய்ததாம்!
தோற்றுப்போன நபர்கள் தலை
தொங்கிப் போச்சுதாம்!
தோரணங்கள் கட்டிச் சிங்கம்
பவனி வந்ததாம்!

அன்று சனிக்கிழமை. சுரேஷ் படிப்பைத் தவிர மற்ற விஷயங்களிலும் ஈடுபாடுள்ளவன். எல்லாவற்றிலும் நன்ருகப் பிகாசிப்பவன். கல்லூரியில் அவன் என். ஸி. ஸி. இளைஞர் ராணுவப்படையில் ஒரு கேடட். மற்றும் கல்லூரிப் பொதுச்சேவைக் கழகம் போன்றவற்றிலும் அவன் அங்கத்தினன். கல்லூரி யூனியனிலும் அவன் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருன்.

அன்று சனிக்கிழமை என்று சொன்னேன் அல்லவா? அன்று பாரேடு உண்டு. அதற்குச் சென்ருக வேண்டும். 'யூனிபாரம்' அணிந்து கொள்ளும்போதே பல புதிய யோசனைகளைத் தயார் செய்தான்.

அவனது 'பாண்ட்' பையில் முக்கியமான குறிப்புகளடங்கிய ஒரு காகிதம்.

சங்கேத பாஷையில் சில விஷயங்களைக் குறித்திருந்தான் அதில். அந்த விஷயங்கள் மட்டும் உபயோகமாயிருந்து விட்டால்..?

வெற்றி நிச்சயம்தான்.

கமாண்டிங் ஆபீஸர் வழக்கம் போல் 'கேடட்'டுகளைப் பல 'ஸ்குவா'டுகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு பாடம் விதித்து விட்டார்.

சுரேஷின் ஸ்குவாடுக்கு முதலில் 'பீல்ட் கிராப்ட்' என்னும் 'நிலத் தந்திரம்'. சற்றே ஏமாந்து விட்டான் சுரேஷ். சுரேஷ் எதிர்பார்த்ததோ..வேறு பாடம். ஆனல் கிடைத்தது..?

இரண்டாம் பீரியடும் வந்தது.

தற்போது அவன் விரும்பியது வீணுகவில்லை.

ஆபீஸரிடமிருந்து உத்தரவு கிடைத்துவிட்டது. சுரேஷின் குரூப் 'மேப்'பை உபயோகிக்க வேண்டும்.

மாபெரும் பரிசு கிடைத்தது போல் துள்ளிக் குதித்தான் அவன். அவர் அவனிடம் ஏழெட்டு மேப்புகளைக் கொடுத்துவிட்டு, அவனது ஸ்குவாடுக்குப் பாடம் நடத்தும் பொறுப்பை அவனிடமே ஒப்படைத்து விட்டார். சுரேஷுக்குச் சங்கடமாய்ப் போய்விட்டது.

அவன் அதை விரும்பவில்லை.

சில நிமிஷங்கள் பொறுப்பை நிறைவேற்றிவிட்டு வேறு ஒரு கேடட்டை அழைத்தான். அவனிடம், பாடத்தை நடத்துமாறு கூறிவிட்டுத் தன் கையில் ஒரு படத்துடன் தனியே சென்று விட்டான்.

அதை நன்கு ஆராயத் தொடங்கினுன் அவன்.

ஆம்...'மேப்'பென்ருல் சாதாரண 'மேப்'பா?

ஒரு சதுர அடிப்படத்தில் உலகத்தை உள்ளடக்கி இது தான் 'ஸைபீரியாச் சமவெளி' என்று ஒரு புள்ளியைக் காட்டுகிருர்களே, அது போலவா? இல்லை அதற்கும் இந்தப் படத்திற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு.

ராணுவத்தின் உபயோகத்திற்காக, மிகவும் ஏராளமான பொருள் செலவில் அடிக்கடி விமானமூலம் சர்வே செய்து, பாதுகாப்பிலாகாவால் வெளியிடப்பட்ட படங்கள்

அவை. ஒரு சிறு ஊரை அடக்குவதற்கு மட்டும் ஏழெட்டுப் பிரிவுகள் தேவையாய் இருக்கின்றன இங்கே. ராணுவத்தில் மிகவும் ரகசியமாகப் பாதுகாக்கப்படுபவைகள் இந்த 'மேப்'புகள். எதிரிகளுக்குக் குறித்த படங்களில் ஒன்றுகிடைத்தாலும் போதும்; குடி முழுகிப்போய் விடும். அதை ராணுவக் காரியாலயத்தைவிட்டு வெளியே கொண்டு செல்வதும் குற்றம்.

சுரேஷ் அது போன்ற ஒரு குற்றத்தைத்தான் தற்போது செய்து கொண்டிருக்கிறான்.

ஜீயபுரத்தின் படம் சுரேஷின் கையில்! பெரும் துரவுகள், சிறு வாய்க்கால்கள் முதலியவையும் படத்திலிருந்து தப்பாது. சுரேஷுக்கு வேண்டியது அதுதான். அவனுடைய கழுகுக் கண்கள் படத்தை நன்ருகச் சோதனை செய்து கொண்டிருந்தன.

பிரத்தியேக அடையாளங்கள் (கன்வென்ஷனல் ஸைன்) மூலம்தான் பறங்கியன் தோப்பில் சென்ற வழிகள் எல்லாம் கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருந்தான் அவன்.

இதோ தெரிகிறதே..

அந்த மண்டபம் கூட ஒரு சிறு அடையாளத்தால் காட்டப்பட்டிருந்தது படத்தில்.

சுரேஷின் முகத்தில் ஆனந்தம்!

மேலே தொடர்ந்தான் அவன். அவனது வலதுகை நிஜார்ப்

பையில் சென்றது. வெளியே வரும்போது நன்ருக மடிக்கப்பட்ட வெள்ளைக் காகிதம் ஒன்றையும் எடுத்து வந்தது.

மேப்பின் அருகில் பேப்பரைப் பிரித்த வண்ணம் வைத்தான் சுரேஷ். அவனது பென்சில் சில குறிப்பிட்ட இடங்களையும், வழிகளையும் வரையத் தொடங்கியது. படத்திலிருந்து, பறங்கியன் தோப்பைத் தொடர்ந்தாற்போல் 'வொயிட்ரோஸ் கார்டன்ஸ்' என்ற பெரிய காடு இருப்பதை அறிந்தான் அவன். அதன் ஒரு மூலையில் முத்தாய்ப்பு வைத்தது போன்று ஒரு பெரிய கட்டிடம் இருப்பதும் புரிந்தது.

ஆனுல்...

அதை நெருங்க நேர்வழி யொன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே! கிட்டத்தட்ட சுரேஷ் அந்த 'மேப்'பையே மறு பதிப்பு எடுத்து விட்டான்.

சட்ட விரோதமான ஒரு செயலை, ராணுவப் பாடங்களுக்கு அவனைப் பொறுத்த மட்டில் தேவையில்லாத ஒரு நிகழ்ச்சியைச் செய்துவிட்டான் சுரேஷ்.

அந்தச் சமயம்...

''சுரேஷ்'' என்ற சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான் அவன். பின்னுல் மூன்று நக்ஷத்திரங்கள் பதித்த அடையாளத்துடன் கம்பீரமாகக் கமாண்டிங் ஆபீஸர் நின்ருர்.

அதிருஷ்ட வசமாக அவர், 'சுரேஷ் தன் பாடங்களில் ஈடுபட்டிருக்கிருன் மும்முரமாக' என்று எண்ணிவிட்டார். அவனை மெச்சிய படியே வேறு ஒரு குழுவைக் கவனிக்கச் சென்றுவிட்டார் அவர். அவரது கவனக்குறைவென்று சொல்ல முடியாது. ஆனுல்.. செய்யக்கூடாததைச் செய்வான் என்று அவர் கண்டாரா?

பாரேடு முடிந்ததும், கேடட்டுகளும், ஆபீஸர்



களும் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்ட போது ராணுவ ரகசியத்தில் ஒரு சிறு பகுதியும் டிஸ்மிஸ் செய்யப் படுகிறதை யார்தான் அறிய முடியும்?

தற்போது சுரேஷின் மனத்தில் ஒரு புதிய தெம்பு உருவாகியிருந்தது. முன்பு ஏற்பட்ட விபரீதம் போன்றவை தற்போது ஏற்படவுமில்லை. ஏதாவது இருந்தாலும் கூச்சலும் போடுவதில்லை சுரேஷ்!

நாட்களோ பறந்துகொண்டிருந்தன! தான் ராணுவ மேப்பிவிருந்து எடுத்துக்கொண்ட குறிப்புகளை நடைமுறையில் உபயோகிக்கத் துடித்தான் சுரேஷ். தனது ஒவ்வொரு நிமிஷத்தையும் அத்தியாவசியமான விஷயங்களிலேயே செலவழித்தான் அவன். தற்போது அவனுக்கு இரண்டு முக்கியமான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன. ஒன்று; மர்ம வார்த்தையின் பொருளைக் கண்டு பிடிப்பது. மற்றொன்று 'வொயிட் ரோஸ் கார்டன்ஸ்' புதிரை விடுவிக்கவேண்டும். மர்ம வார்த்தையில் மிகவும் முக்கியமான, உபயோகமான விஷயங்களும் இருப்பதாக அவனுக்குப் பட்டது.

அன்று—

காலை பத்து மணிக்குச் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டான் சுரேஷ். அவனது தற்போதைய முயற்சி 'கார்டன்ஸின்' கட்டிடத்தைப் பற்றிய விவரம் முழுவதும் தெரிந்துகொண்டாக வேண்டும் என்பதே. படகுத் துறைக்கு நேரே சென்றான். தற்போது ஜிம்மி பின் தொடரவில்லை.

படகோட்டியிடம் பறங்கியன் தோப்புக்குப் பக்கத்துத் துறையில் கொண்டுவிடும்படிக் கூறி, ஒரு ரூபாயையும் முழுசாக அவன் கையில் கொடுத்தான். படகோட்டிக்கு வாயெல்லாம் பல்!

இரண்டணுவும், நாலணுவும் தவிர சேர்ந்தாற்போல வேறொன்றையும் பார்த்திராத அவனுக்கு ஒரு ரூபாய் என்றதும் சுவர்க்கத்திற்கே போய்விட்டது போல் பூரிப்பு.

'ஐலஸா' பாடிக்கொண்டு துடுப்பு வரிய ஆரம்பித்தான் அவன். அமைதியான பொன்னித்தாயின் பரப்பைக் கிழித்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தது படகு.

பல விபரீத எண்ணங்கள் மறுபடியும் சுரேஷைச் சூழ ஆரம்பித்தன.

திடீரென்று சரித்திர பாடங்களில் அவன் சிந்தனை சென்றது. ராபர்ட் கிளைவ் என்னும் வீரனை நினைப்பு மூட்டிக்கொண்டான். ஒன்றுக்கும் உதவாதவன் என்று கைவிடப்பட்ட கிளைவ் கடைசியில் கர்னல் கிளைவ் ஆன விந்தைதான் என்ன! சாதாரண குமாஸ்தாவாக 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி'யில் சேர்ந்த அவன் எப்பேர்ப்பட்ட ஆச்சரியமான செயல்களைச் செய்ய முடிந்தது என வியந்தான் சுரேஷ்.

தன்னையும் கிளைவுடன் ஒப்பிட ஆரம்பித்தான் அவன். நமது நாட்டைப் பொறுத்தமட்டில் நாம் கிளைவை விரும்பாவிட்டாலும், இங்கிலாந்தில் பெரும் வீரதீரர்களின் சமாதி அடங்கிய 'வெஸ்ட் மின்ஸ்டர் ஆபே'யில் ராபர்ட் கிளைவுக்கு அல்லவா முக்கியமான ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள்! அங்கே நுழைந்ததும் நாம் காண்பது என்ன? கம்பீரமான திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையின் உருவம் அல்லவா?

தன் தாய்நாட்டைப் பொறுத்த மட்டில் 'சூரியன் அஸ்தமிக்காத நாடு' என்ற பெருமையை அதற்கு ஏற்படுத்தியவன் கிளைவ் அல்லவா?

அவனும் தன் வாழ்க்கையில் வெறுப்புற்று மும்முறை தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தான். ஆனால் குறி தவறியது. 'நமக்குக் கடவுளால் வேறு வேலை அளிக்கப் பட்டிருக்கிறது' என்று உணர்ந்தான் அவன். ராணுவத்தில் சேர்ந்தான்; முன்னேறினான்.

நமக்கும் ஏன் அதே நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடாது?

நாம் சாதாரணமாக நீச்சல் போட்டியில் கலந்துகொள்ள விழைந்தோம். கரை சேருமிடத்தில் நம்மை மட்டும் பெரிய சுழல் ஆழ்த்துவானேன்? பின் ஜிம்மி நம்மைத் தப்புவித்து, வேறொருவரும் நெருங்க முடியாத பாறையில் நம்மைச் சேர்ப்பானேன்?—நினைக்க

நினைக்க வியப்பாக இருந்தது சுரேஷுக்கு. தன்னைத் தவிர வேறு சிலரும்தான் சுழலில் சிக்கினர். ஆனல் தனக்கு நேர்ந்த அநுபவம் மட்டும் புதிதல்லவா?

ஆபத்தில் சிக்கி உயிர் தப்பியதை விவரிக்க முடியாத ஒரு புதுக் காரணமாகக் கொண்டான் சுரேஷ். 'நான் தப்பியதில் எனக்கு மட்டும் பிரயோஜனம் இருக்க முடியாது. என்னல் பலருக்கும் உபயோகம் இருந்தாக வேண்டும். பலன் கிடைத்தே ஆக வேண்டும். கிளைவ் தனது ஏழை நாட்டுக்குச் செல்வம் சேர்த்தான். நான் ஏன் என் நாட்டின் தீயோரைக் கண்டுபிடிக்க உதவமுடியாது? அதிர்ஷ்டம் என்ற ஒன்று நமக்கு உதவியே தீரும்.' இந்த விஷயத்திலும் கிளைவின் உதாரணமே அவன் நினைவுக்கு வந்தது.

ஆம்.. கிளைவ் குறைந்த அளவு ராணுவ வீரர்களைக்கொண்டு, நவாபின் பிரம்மாண்டமான சேனையைப் பிளாஸியில் வெல்ல முடிந்தது, எதனல்?

'அதிர்ஷ்டம்!'

எண்ணிய மாத்திரத்தில் ஒரு முறை சிலிர்த்தது சுரேஷின் தேகம். அத்துடன், தான் இன்னும் எவ்வளவு இன்னல்களைக் கடந்தாக வேண்டுமோ என்ற பயமும் அவனை லேசாகச் சூழ்ந்து கொண்டது.

இதுவரை 'பெண்டுலம்' போல் ஊசலாடிக்கொண் டிருந்த அவ

னுடைய தைரியம் தற்போது ஸ்திர மாகியது. 'எப்படிப்பட்ட இடர் வரினும் நாம் சமாளித்தே தீரு வோம்' என்ற உறுதி அவன் மனத்தகத்தே குடிகொண்டது.

படகோட்டி அச்சமயம் திரும்பி னன். ''எந்தத் துறையில் சாமி நிறுத்தணும்?'' என்ற பாவத் துடன் பார்த்தான் சுரேஷை. சற்று நேரத்தில் கரையும் வந் தது. சுரேஷ் இறங்கியவாறே, தற் போது நீ உன் துறைக்குப் போய் விடு. இன்னும் இரண்டுமணி அவ காசத்தில் நிச்சயமாக இதே துறைக்கு வந்துவிடு. சற்று நேர மானுலும் காத்திருக்கலாம்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். எங்கே..?

5. சிம்பென்ஸீ!

நேராக எங்கே செல்வது? என்ன காரணங்களைத் தயார் செய்வது என்றே முதலில் எண்ணி னன்.

அவன் இறங்கிய துறையும் சற்று ஆபத்தானதே. வழக்கமான உபயோகமான கரையல்ல அது. படகோட்டி சுரேஷுக்காகத்தான் அங்கே சிரமப்பட்டுப் படகை நிறுத்தவேண்டி யிருந்தது. மற்றப் படி அந்த அமானுஷ்யமான இடத் தில் வழித்துணை ஒன்று மில்லாமல் நாம் சென்றுவிட முடியுமா?

தன் பையிலிருந்து அந்த இடத் துப் படத்தை எடுத்தான் சுரேஷ். அதுதான் அவனுக்கு எவ்வளவு விதத்தில் உபயோகமாகப் போகி றது!

பேசாத நண்பனுக, நடக்காத வழிகாட்டியாக - ஆனுல் எல்லா வகையிலும் உதவ அது தயாராக இருந்ததே!

படத்தின் மூலம் அதிலுள்ள கட்டடம் இன்னும் ஒன்றரைமைல் தூரத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டான். இடையே இரண்டொரு பெரிய துரவுகளும் காவிரியின் உள்பாய்ந்த வாய்க் காலும் (பேக்வாட்டர்ஸ்) இருப் பது அவனுக்குத் தெரிந்தது. இடங்களின் அமைப்பைமட்டும் படத்திலிருந்து கண்டு பிடித்து விடலாம். ஆனுல் அவைகளைக் கடக்க அந்தப் படம் உதவ முடியுமா? அதற்குப் படத்தையே எதிர்பார்ப்பது பைத்தியக்காரத் தனம் அல்லவா?

முன்பே ஓர் ஆளை உதவிக்குக் கூட்டி வராதது குறித்துப் பச்சாத் தாபப் பட்டான் அவன்..ஆனுல்..

முன்பே, தெரிந்த ஓர் ஆளை இவ்விஷயத்தில் உதவிக்குக் கூப்பிடு வதைவிட, பழக்க மில்லாத ஓர் ஆளைக் கூப்பிடுவதில் சௌகரிய மிருப்பதையும் அவன் அறிந்தே இருந்தான்.

காலில் கனமான பூட்ஸ் போட்டுக் கொண்டிருந்ததால் சதுப்பான இடங்களிலும் சமா ளித்த வண்ணம் முன்னேற முடிந் தது அவனுல். என்னதான் முன் னெச்சரிக்கை எடுத்துக் கொண்டா லும் 'பூட்ஸின் சுவடு'' என்று ஒன்று இருக்கிறதே.

அவர்கள் அரசாங்கத்தின்- போலீசாரின் - விரோதியா யிருந் தால், மேற்படிச் சுவடுகள் தனக் குப் பேராபத்தை விளைவித்தே தீரும்.

மிகவும் ஜாக்கிரதையாகவே இலைச் சருகுகள் போன்றவற்றின் மீது அடி வைத்து முன்னேற வேண்டியிருந்தது அவனுக்கு.

ஆடைகள் விஷயத்திலும் அவன் முன் எச்சரிக்கையாகத் தகுந்த வர்ணத்தையே உபயோகித்திருந் தான். நல்ல, கரும் பச்சை நிறமான அவனது ஆடைகள் தூரத்திலிருந்து யாராவது கவனித் துக் கொண்டிருந்தாலும் இனம் கண்டுபிடிக்க முடியாத வாறு, சுற்றுப்புறத் தாவரங்களை ஒட் டியே இருந்தன. இவ்விஷயத்தில் அவனது ராணுவ மூளை நல்ல உதவி செய்தது.

தற்போது கட்டடத்தை நோக் கிப் போகும் உத்தேசமில்லை அவனுக்கு. சற்றுத் தொலைவில் சேரி ஒன்றிருப்பது அவனுக்குத் தெரியும்.

அங்கே சென்று யாராவது நம் பத் தகுந்த ஆள் கிடைப்பார்களா என்று தேடுவது அவனது புதுப் பொறுப்பு.

ஆற்றினேரமாக நடக்க ஆரம் பித்தான் அவன். (தொடரும்)

துறு துறுப்பை

ஸி. எஸ். விஜயா



சந்துரு எப்போதுமே துறு துறுவென்றுதான் இருப்பான். எந்தச் சிறு காரியமும் அவன் கண்ணில் பட்டுவிடும். ஆகையால் பள்ளிக்கூடத்தில் ரொம்பப் புத்திசாலியென்று பெயர் வாங்கினன். வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் அவனை மிக்க புத்திசாலி எனப் புகழ்ந்தனர்.

ஆனல் சந்துருவுக்கு ஒரு பெரிய குறை. ''பள்ளிக்கூடத்திலும் சரி, அக்கம் பக்கத்திலும் சரி, நம்மை இவ்வளவு புத்திசாலியென்று புகழ்கிறர்களே; ஆனல் வீட்டில் மட்டும் அதற்கு நேர்மாருக 'அதிகப் பிரசங்கி', 'வாயாடி' என்று ஏன் என்னை எப்போதும் திட்டிக்கொண்டே இருக்கிறர்கள்?'' என்று அடிக்கடி வருந்துவான்.

வீட்டில், ஒரு நாள சமையற்காரன் காபி கலந்து கொண்டிருந்தான். அந்தச் சமயம் சந்துரு சமயற்கட்டுக்குள் நுழைந்தான். அப்போது சமையற்காரன் காபியினுள் கையை விட்டு அவசரமாக எதையோ வெளியே எடுத்துப் போட்டான். சந்துருவைக் கண்டதும் பாத்திரத்தை மறைத்துக் கொண்டு நின்றன். ஆனல் அவன் செய்த காரியம் நொடிப் பொழுதில் சந்துருவின் கண்களில் பட்டு விட்டது.

''காபியிலே ஈ விழும் வரைக்கும் என்ன செய்தே? அதைக் கை விட்டு வேறு எடுக்கிறயே'' என்று என்று கூப்பாடு போட்டான் சந்துரு அருவருப்புடன்.

சமையற்காரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் தப்பை மறைப்பதற்காக வெகு கோபத்துடன் சந்துருவின் தாயாரிடம் சென்ருன்.

''அம்மா..இதோ பாருங்கோ.. வீட்டு சிறு பிள்ளை முதற்கொண்டு இப்படி விரட்டினல் நம்மால் இங்கே வேலை செய்ய முடியாது. நான் வேறு இடம் பார்த்துக்கிறேன்'' என்ருன் விறைப்பாக.

அம்மாளுக்கு விஷயம் என்னவென்றே புரியவில்லை. ''ஏ..சந்துரு..என்னடா இது? குழந்தையா லட்சணமா இருந்து தொலையேன்! ஏண்டா எல்லார் கிட்டேயும் வம்புக்குப் போறே?'' என்று இரைந்தாள்.

பல நாட்களாகச் சரியான சமையற்காரன் கிடைக்காமல் திண்டாடியதை நினைத்து, எங்கே இவனும் போய்விடப்போகிருனே என்ற பயம் அவளுக்கு.

சந்துருவுக்குத் தாயார் தன்னைத் திட்டுவது கோபமாக வந்தது. ''பின்னே காபியிலே ஈயை..'' என்று அவனும் கூப்பாடு போடுமுன், ''டேய்..உன் வேலையைப் பார்த்துண்டு போடா'' என்று அவனைத் திட்டிவிட்டு, ''நீ போப்பா, வேலையைப் பார், நான் அவனைக் கண்டிச்சு வைக்கிறேன்'' என்று சமையற்காரனைச் சமாதானப் படுத்தி அனுப்பினுள் அந்தம்மாள்.

சந்துருவுக்கு ஒரே கோபம். ''நான் என்ன தப்பாகச் சொல்லி விட்டேன்? உள்ளதைச் சொன்னல் எல்லோருக்கும் உடம்பெரிச்சல்'' என்று முணுமுணுத்துக்கொண்டே அப்பால் சென்றுவிட்டான்.

இன்னெரு நாள் சந்துருவின் தகப்பனர் ஊரிலில்லை. சந்துருவுக்குத் தினம் அவன் தந்தை இரவு படுக்குமுன் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவது வழக்கமென்று தெரியும். ஆகையால் அன்று தன் தந்தை ஊரிலில்லாககால் தானே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

படுக்கப் போகுமுன் ஒரு 'டார்ச் லைட்'டை எடுத்துக் கொண்டு மெதுவாகத் தோட்டப் பக்கம் போனுன். கறிகாய்த் தோட்டத்துப் பக்கம் ஏதோ சலசலப்புக் கேட்கவே, வேகமாக அந்தப் பக்கம் சென்று 'டார்ச்' விளக்கைப் போட்டான். அப்போது ஓர் ஆள் அதிவேகமாக அங்கிருந்து ஓடினுன். ஆனல் சந்துருவின் கூர்மையான கண்களுக்கு அது யார் என்று அறிய அரை விநாடிகூடப் பிடிக்கவில்லை.

''திருடா..டே.. நில்லுடா'' என்று கத்தினுன். ஆனல் அந்த ஆள் ஓடிவிட்டான்.

கூப்பாட்டைக் கேட்டு அலறிப் புடைத்துக்கொண்டு சந்துருவின் அம்மாவும் அக்காவும் அங்கே ஓடி வந்தனர்.

ஆனல் அங்கே சந்துருவைத் தவிர வேறு ஒருவரும் இல்லாததைக் கண்டு சந்துருவின் தாயாருக்குக் கோபமாக வந்தது.

''ஏண்டா, உன்னை யார் இப்போ வீட்டைக் காவல் காக்கச் சொன்னது? தோட்டக்கார முனியன் இருக்கான்; பார்த்துக்கருன், நீ ஏன் இதிலெல்லாம் தலையிட்டு இருக்கறவா பிராணனை வாங்கறே?'' என்று திட்டினுள் அம்மா.

''ஆஹா..தோட்டக்காரன் காவல் ரொம்பப் பலம்தான். சித்தே முன்னே அவன்தானே கறிகாய் எல்லாம் பறித்துண்டிருந்தான்? பெரிய காவல்! வேலியே பயிரை மேய்ந்த கதைதான்!'' என்ருன் சந்துரு கோபத்துடன்.

அந்தச் சமயம் பூனைபோல் ஒன்றும் அறியாத பாவனையில் அங்கு வந்த முனியன், தன் குட்டு வெளிப் பட்டு விடப் போகிறதே என்று பயந்து, ''அம்மா..நேத்துப் புள்ளே..என்னை இப்படிச் சொல்லுதே, நல்லாயிருக்குதாம்மா? நான் வேணுமானு இப்போதே நின்னுபோறேன். இந்தப் பேச்செல்லாம் யாரு கேப்பாங்கம்மா?'' என ஒப்பாரி வைத்தான்.

சந்துருவின் கலாட்டாவில், எங்கே கணவன் இல்லாத சமயத்

தில் வேலைக்காரனும் போய் விடப்போகிருனே என்று பயந்த அம்மாள், சந்துருவையே திட்டி விட்டு வேலைக்காரனைச் சமாதானப் படுத்தினுள்.

சந்துருவின் அக்கா அவன் காதை முறுக்கி உள்ளே அழைத்துச் சென்ருள்.

இப்படிப் பல சமயங்களில் சந்துருவை மெச்ச வேண்டிய சந்தர்ப்பங்களில் எல்லாம் அந்த வீட்டார் அவனைத் திட்டுவதும் அடிப்பதும் அவனுக்குப் பெரும் வருத்தத்தையே அளித்தது. எப்படியாவது தான் சொல்வதில் நியாயம் இருப்பதை அவர்களுக்கு நிரூபிக்க வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் சந்துரு வாசலில் விளையாடிக்கொண்டிருந்தான். வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து முதலில் வயதான தம்பதிகள் இறங்கினர். அதன் பின் நிதானமாக, சுற்று முற்றும் பார்த்துவிட்டு ஒரு வாலிபர் இறங்கினுர். இறங்கியவுடன் அவசர அவசரமாக வேஷ்டியைத் தழைய இழுத்து விட்டுக்கொண்டார். ஆனல் அவர் இறங்கும் போது, அவர் கால் ஒன்று வீங்கி இருந்ததைக் கவனித்துவிட்டான் சந்துரு.

''பாவம்! . . 'யானைக் கால்'னு சொல்லுவாளே . . அது போல இருக்கு'' என்று எண்ணிக்கொண்டான் மனத்தில்.

அப்போது உள்ளேயிருந்து வந்த அவன் தந்தை அந்த வாலிபனை உள்ளே அழைத்துச் சென்ருர்.

உள்ளேயிருந்து அம்மா சைகை காட்டிச் சந்துருவைக் கூப்பிட்டாள்.

'அம்மா, அப்பா இருவர் முகத்திலும் ஏன் இந்த பரபரப்பு?'



எஜமானர்: நான் கொடுத்த இரண்டு கடிதங்களையும் தபாலில் சேர்த்துவிட்டாயா?

வேலைக்காரன்: சேர்த்து விட்டேனுங்க; ஆனால் நீங்கள் வெளிநாட்டுத் தபாலுக்கு இரண்டணா ஸ்டாம்பும், உள்நாட்டுத் தபாலுக்கு 12 அணா ஸ்டாம்பும் தவறாக ஒட்டிவிட்டீர்கள்.

எஜமானர்: அதற்கு நீ என்ன செய்தாய்?

வேலைக்காரன்: அவைகளின் விலாசங்களை மாற்றி எழுதிப் போட்டுவிட்டேங்க!

என்று எண்ணியவாறே உள்ளே சென்றான் அவன்.

"டேய்.. சந்துரு..வந்திருப்பது யார் தெரியுமா? உன் அக்காவைப் பெண் பார்க்க. உன் வாலைக் கொஞ்சம் சுருட்டி வைத்துக்கொள். உன் திரு வாயையும் மூடிக்கொண்டிரு.. அவர்கள் போகும்வரை" என அவனை எச்சரித்தாள் அம்மா.

அக்காவைப் பெண் பார்க்க, என்று அம்மா சொன்னது சந்துருவுக்குச் 'சுரீர்' என்றது.

"சே..அந்த மனுஷனுக்குக் கால் வீங்கியிருக்குன்னு எப்படி இப்போ நிரூபிக்கிறது? என யோசிக்கலானான்.

அக்காவிடமே சொல்லிப் பார்ப்போம் என்று அவளிடம் வந்து சொன்னான். ஆனால் அவளோ, "சீ..போடா" என்று எரிந்து விழுந்தாள்.

சந்துருவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் அக்காள் சிற்றுண்டியும் காபியும் கொண்டுவந்து அந்தப் பிள்ளையின் பக்கத்திலிருந்த ஸ்டூலில் வைத்துவிட்டு நமஸ்கரிக்கக் குனிந்தாள். அப்போது திடீரென்று சந்துரு எழுந்திருப்பதுபோல் எழுந்து ஸ்டூலைத் தடுக்கிவிட்டான். அதன் மேல் இருந்த சிற்றுண்டியும் காபியும் கீழே சிதறின. அப்போது பெண் பார்க்க வந்த பிள்ளை, தன் சரிகை வேஷ்டி கறையாகி விடுமே என்ற பீதியில் சடக்கென வேஷ்டியைத் தூக்கிக் கொண்டான்.

நமஸ்காரம் செய்யக் குனிந்த சந்துருவின் அக்காள் கண்ணில் அந்தக் கால் வீக்கம் பட்டுவிட்டது. அவசர அவசரமாக உள்ளே ஓடிவிட்டாள்.

கோபமாக எழுந்த சந்துருவின் தந்தை, "தடியா, காபி வைத்திருப்பது தெரியலை?" என்று அவனை அடிக்கப்போனார்.

அடிக்குப் பயந்து சந்துரு உள்ளே ஓடினான். அங்கே நின்றிருந்த அவன் அக்கா, "அப்பா, அவன் அப்படித் தடுக்கியது எவ்வளவோ நல்லதாகப் போச்சு. குழந்தை முதலிலேயே என்னிடம் சொன்னான். நான்தான் நம்பவில்லை.

"இப்போது பார்த்தால் அந்தப் பிள்ளையின் கால் நிஜமாகவே வீங்கித்தான் இருக்கு! நீங்கள் அவர் பணத்தையும் அந்தஸ்தையும் பார்ப்பதில் இதைக் கவனிக்கவே இல்லை" என்றாள் பெண்.

அங்கே என்ன அமர்க்களம் என்று பார்க்க வந்த சந்துருவின் தாய் விஷயத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டாள்.

உடனே சந்துருவுக்குப் பெருமை தாங்கவில்லை. "ஏம்மா அதுதானே யானைக்கால்?" என்றான் தன் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள. "வாயை மூடுடா, துறுதுறுப்பை" என்று செல்லமாகக் கோபித்தாள் அக்கா.

ஏக்தின்கா முதலாளி

ஆர். என். ராஜன்

(இடம்: ராஜு வீடு; நேரம் மாலே. 7 மணி).

காட்சி-1

ராஜு: நான் முடியவே முடியாது. நாளைக்கு இந்த வாத்தியார் வந்தா நான் கண்டிப்பா டியூஷன் சொல்லிக்கவே மாட்டேன்.

தாய்: முடியாதுன்னு முழு வருஷப் பரீட்சையில் எப்படி மார்க்கு வாங்குவது?

ராஜு: உனக்கு வேண்டியது மார்க்குதானே? வாங்கா விட்டால் பார்த்துக்கோ!

தாய்: அதான் அரை வருஷப் பரீட்சையில் வாங்கினுயே, நூத்துக்கு மூணு! பார்த்துண்டுதானே இருந்தேன்?

ராஜு: அதுக்காக இந்த வாத்தியார் கிட்ட அடிபட்டுச் சாகச் சொல்கிருயா? (கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டே) இன்னுங்கூட இந்த இடம் அப்படியே எரிச்சலா எரிகிறது.

தாய்: நீ படிக்கல்லேன்னு எந்த வாத்தியார்தான் அடிக்கமாட்டார்?

ராஜு: அதெல்லாம் எனக்குத் தெரியாது. நாளையிலிருந்து அந்த வாத்தியார்கிட்ட நான் டியூஷன் சொல்லிக்கமாட்டேன். அப்பா கிட்டேயும் சொல்லிடு.

காட்சி-2

(மறுநாள் மாலே 5 மணி: விளையாட்டு மைதானம்.)

கந்தன்: டேய் கண்ணு, விஷயம் தெரியுமா, உனக்கு?

கண்: என்னடா விஷயம்?

கந்: இன்னிக்கி மத்தியான்னம் கேரம் விளையாட ராஜு எங்க வீட்டுக்கு ஏன் வரல்லே, தெரியுமா?

கண்: ஏன், எந்த ஊருக்குப் போயிருக்கான்?

கந்: எந்த ஊருக்கும் இல்லே, அப்பனே! அவன் அப்பாதான் இன்னிக்கி ஊருக்குப் போயிருக்காராம்..

கண்: அதனுலே..

கந்: கேளு தம்பி. 'இன்னிக்குத்தான் சனிக்கிழமை, பள்ளிக்கூடம் லீவு ஆச்சே! அதனுலே கடைக்குப் போய் எனக்குப் பதிலா இருந்து பார்த்துக்கோ.' அப்படின்னு ராஜுகிட்ட சொல்லிட்டுப் போயிருக்காராம் அவன் அப்பா.

கண்: அப்போ, இன்னிக்கு அவன்தான் கடைக்கு முதலாளின்னு சொல்லு. அப்படின்னு இன்னிக்கு அவன் பாடு குஷிதான்!

கந்: தெரியாத்தனமா அவன் எதிரிலே இந்த மாதிரி சொல்லிட்டு மாட்டிக்கப் போறே! சொன்னு, ஓங்கிப் 'பளீர்'னு ஒரு அறை விடுவான், உன் கன்னத்துலே.

கண்: எதுக்குடா என்னை அறைவான்?

கந்: ஒரே நாளிலே முதலாளியா இருந்து 'போதும் போதும்'னு புளித்துப் போச்சாம் ஐயாவுக்கு!

அப்பா: டேய் ராமு, ஒரு கார்டு முக்காலணு வீதம் 30 கார்டுகள் என்ன விலே? சட்டென்று சொல்.

ராமு: சற்று இரு அப்பா. போஸ்டாபீசுக்குப் போய் வந்து இரண்டு நிமிஷத்தில் விடையைச் சொல்லிவிடுகிறேன்.

—N. இந்திரா

கண்: ஏன் அப்படி என்ன நடந்தது?

கந்: விஷயத்தைக் கேளேன். கோடி வீட்டுச் சுந்தரேசம் பிள்ளை அந்தக் கடைக்குப் போனாராம். சாமான் வாங்கிண்டு பில்லையும் பத்து ரூபா நோட்டையும் ராஜு கிட்ட கொடுத்தார். பில் பணம் போக கொடுத்த பாக்கியை எண்ணிப் பார்த்துவிட்டு, 'என்னடா, எலே, ஒரு ரூபா குறையுது?' என்று கேட்டாராம்.

கண்: ஐயாதான் கணக்கிலே புலியாச்சே! கழித்தல் கணக்குத் தப்பா இருக்கும்! அதானே?

கந்: தப்பா இருந்தா, வர்றவங்களும் ஏமாறுவாங்களா?

கண்: சரி, என்ன ஆச்சு சொல்லு.

சந்: 'சரியா இருக்குமே!' என்றானும் பதிலுக்கு.

கண்: அப்புறம்?

சந்; அப்புறம் என்ன? அவருக்குக் கோபம் வந்துவிட்டதாம். 'சாமான் விலையைத்தான் நாளுக்கு நாள் ஏத்தி, கொள்ளையடிப்பது போதாதுன்னு, இந்தப் பகல் கொள்ளையை எத்தனை நாளா ஆரம்பிச்சிருக்கே'ன்னு கேட்டாராம்.

கண்: அப்படின்னு பெரிய ரகளைன்னு சொல்லு.

சந்: என்ன மெதுவாச் சொல்றியே, கடைத்தெருவே அங்கே கூடி விட்டதுன்னேன்!

கண்: உம், அப்புறம்?

சந்: தற்செயலா அந்த வழியே போய்க்கொண்டிருந்த ஐம்பு அப்பா, சப்-இன்ஸ்பெக்டர் இருக்காரே, அவர் வந்து சேர்ந்தாராம். அவர்தான் கூட்டத்தைக் கலைத்து, ரெண்டு பேரையும் சமாதானப்படுத்தி, சுந்தரேசம்பிள்ளையை வீட்டுக்கு அனுப்பினாராம்.

கண்: அது கிடக்கட்டும்; குறைந்ததே ஒரு ரூபாய், அதை வாங்கிண்டு போனாரா, சுந்தரேசன்?

சந்: அந்த வேடிக்கையைச் சொல்ல மறந்துட்டேனே! 'சுந்தரேசன் பொய் சொல்லமாட்டார். அவரிடம் குறைந்த ஒரு ரூபாயைக் கொடுத்துவிடு' என்றாராம் சப்-இன்ஸ்பெக்டர்.

கண்: உம்;

கந்: 'நான் சரியாத்தான் கொடுத்தேன். இதோ பாருங்க, நான் போட்ட புள்ளி' என்று நீட்டினானும் ராஜு. அவர் புள்ளியைப் பார்த்து, எகத்தாளமா ஒரு சிரிப்பை உதிர்த்து, ராஜு காது கிட்ட போய், 'உன் கழித்தல் புள்ளியில்தான் ஒரு ரூபாய் விட்டிருக்கு. பேசாமெ ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்து அவரை அனுப்பு' என்றாராம்.

கண்: பேஷ்! இதை வச்சிண்டு ஒரு கதையே எழுதிடலாம் போலிருக்கே!

(மைதானத்துக்கு மற்றப் பையன்களும் வருகிறார்கள். எல்லாரிடமும் இந்த விஷயம் பரவுகிறது.)

காட்சி-3

(முதலியார் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார். எதிர் வீட்டுச் சுந்தரேசன் உள்ளேயிருந்து வெளியில் வருகிறார்).

முத: நேத்து கடைத்தெருவிலே ஒரே ரகளையாமே!

சுந்த: அதுவா! நேத்து அந்தக் கடை முதலாளி இல்லே. அவரு மவன் இருந்தான். பில்லு போக பாக்கிக் கொடுத்த பணத்திலே, ஒரு ரூபாய் குறைவா இருந்தது.

முதலியார்: அந்தப் பையனுக்கு சந்தேகமா இருந்தா பக்கத்திலே கணக்குப் பிள்ளை இருக்கிறாரே, அவர்கிட்டே புள்ளியைக் காட்டக் கூடாதா?

சுந்: அவர் கிட்டேயும் சண்டை. முதலியாரே, நான் ஒரு வார்த்தை சுருக்கமாச் சொல்றேன். இந்தச் சிறுவயதிலே அந்தப் பையனுக்குக் கர்வம் உதவாது. யாருக்கும் முதல்லே பணிவான தன்மை இருந்திட்டா எங்கேயும் வென்றுகிட்டு வந்துடுவாங்க. இதே பையன், கேட்கவேண்டிய முறையிலே தன்மையா கேட்டா, நூறு தடவை கேட்டாக்கூட இதே கணக்குப் பிள்ளை சலிக்காமெ, கோவிக்காமெ பதில் சொல்லுவாரு. என்ன சொல்றீங்க?

முத: நீ சொல்றதிலே உண்மை இல்லாமலா இருக்கும்? இது யாரும் மறுக்க முடியாத விஷயமாச்சே!

சுந்: உண்மையிலேயே அந்தப் பையன் மேலே எனக்கு எப்போதும் ஒரு கண்ணு உண்டு. பள்ளிக்கூடத்திலே போனு, வாத்தியாரைக் கேலி செய்யறது; மற்றப் பையன்களையும் அந்த வேலையிலே தூண்டி விடுவது; வெளியே வந்தா பெரியவங்களுக்குப் பின்னுல் போய் அழகு காட்டுவது; வீட்டில் வந்தா அம்மா எது சொன்னுலும் எதிர்த்துப் பேசுவது, இந்தப் பையனுக்கு எப்படிங்க படிப்பு வரும்?

முத: ஆமாம். அவனுலே மற்றவங்களும் கெட்டுப் போருங்களே!

சுந்: இதெல்லாம் மனசிலே வெச்சுக்கிட்டுத்தான் அந்தப் பையனுக்குச் சரியான பாடம் கற்பிக்கணும்னு இருந்தேன். நேத்து அந்த சப்-இன்ஸ்பெக்டர் வந்து, சமயத்துக்கு விலக்கல்லேன்னு நாலு விழுந்திருக்காது அவன் மேலே?

முத: 'தாய் தந்தைக்கு அடங்கல்லேன்னு ஊரார் அடக்கிடுவாங்க'ன்னு ஒரு பழமொழி சொல்லுவாங்க. அதுக்கு உங்களையொத்த ஆசாமி ரெண்டுபேரு ஊருக்கு வேண்டியதுதான்.

சுந்: சரிங்க, நாழி ஆயிடுத்து. நான் வர்றேன்.

(இவை யனைத்தும் பக்கத்து நண்பன் வீட்டில் உட்கார்ந்து கேட்டுக்கொண் டிருந்த ராஜு தலையைக் குனிந்துகொண்டே வீட்டுக்குச் செல்கிருன்)

காட்சி 4

(மாலை. விளையாட்டு மைதானம்)

கண்: என்னடா கந்தா! மணி நாலு ஆகிறது! யாரையும் காணேம்?

கந்: டேய்! உன்னையும் என்னையும் வீட்டிலே சரியாகக் கேட்பார் கிடையாது. அப்படியே மிஞ்சிக் கேட்டாலும் கடுக்கா கொடுத்துட்டு வந்துவிடுவோம். நம்மைப் போல இருப்பாங்களா எல்லாரும்?

கண்: எல்லாத்துக்கும் கொஞ்சம் மூளை வேலை செய்யணும்டா. எங்க வீட்டிலே கூடதான் பாட்டி, 'எங்கேடா கிளம்பிட்டே வெயிலிலே?' என்ருள். நாலுமணிக் கெல்லாம் அர்ஜண்டா கணக்கு வாத்தியார் எதுக்கோ வரச்சொல்லியிருக்

கார்னு ஒரு போடு போட்டேன். எதுக்கும் புத்தி வேணும்.

கந்: டேய், எல்லாரும் மாட்டிக் காத வரைக்கும் கெட்டிக்காரங்க தான். சரியா மாட்டிண்டுட்டா, உன் சமயோசித புத்தியைக் கொண்டுபோய் உடைப்பில் போட வேண்டியதுதான். அதுவும் ராஜு இருக்கானே! அவன் அப்பா மாதிரி ஒருத்தர் உங்க வீட்டிலே இருந்தா, அப்போ தெரியும் உனக்கு!

கண்: அவர் மாத்திரம் என்னடா செய்துவிடுவார்?

கந்: என்ன செய்வாரா? என்ன தப்புச் செய்தானே தெரியல்லே, பாவம்! ஒரு நாளைக்கு அவனைக் கன்னத்திலே ஒரு அறை அறைந் தார் பாரு, அதைப் பார்த்திண் டிருந்த எனக்கு அப்படியே தலையை ஒரு சுத்துச் சுத்தி கீழே விழுந்து விடுவேன்போல ஆயிடுத்து! அப் றம் சமாளிச்சுண்டு சொல்லிக்காமெ வந்த வழியே திரும்பிட்டேன்!

கண்: எனக்குக் கூட அவர் இருக்கும்போது அந்த வீட்டு வழி யாக வர்றதுன்னு கொஞ்சம் பயந் தான். டேய்! அதோ ராஜுவே வந்துட்டானே! அவன் பின்னலே ஜம்பு, மணி எல்லாரும் வர்ருங்க!

(மூவரும் வந்துவிடுகிருர்கள்.)

கந்: அடடே! ராஜுகூட வந் துட்டானே இன்னிக்கி!

ஜம்பு: டேய்! என்னடா ராஜு வைப்போய், 'அடா, புடா'ன்னு பேசறே? அவர் இப்போ கடை முதலாளி ஆகிவிட்டார்! தெரி யாதா உனக்கு?

(ராஜு ஜம்புவைக் கோபத் துடன் பார்க்கிருன்.)

மணி: கடை முதலாளியா? எனக் குத் தெரியாதே!

கண்: ஒரே ஒரு நாளைக்குத் தாண்டா! அதுவே அவனுக்குப் போரும் போருமென்று ஆயிடுத்து!

மணி: 'ஏக் தின் கா சுல்தான்'னு சொல்லு!

ஜம்பு: சுல்தான் ஸார்! . . . .

ராஜு: (பல்லைக் கடித்து) டேய், குள்ளப் பயலே! அது மாதிரிக் கூப் பிட்டாய் பல்லை உடைத்துடு வேன்! ஜாக்கிரதை!

ஜம்பு: யார் பல் உடையும் தம்பி! ஏணி மாதிரி நீ இருந் திட்டா, எல்லாரும் பயப்படுவாங் கன்னு நினைச்சியா?

மணி: கழித்தல் கணக்குக்கூடச் சரியாத் தெரியாது, இவரு முத லாளியாண்டா, முதலாளி!

ராஜு:: (முகத்தில் கனல் வீச) டேய், பறட்டைத் தலை, உதை வேணுமா?

கண்: டேய் பனைமரம்! கோடி வீட் டுச் சுந்தரேசம் பிள்ளை, போனுப் போகட்டும்னு உதைக்காத விட் டாரு! இங்கே வாலை ஆட்டின உன் முதுகு வீங்கிவிடும்! ஜாக்கிரதை!

கந்: டேய், உன் உதையெல் லாம் அவனுக்கு ஒரு பொருட்டே அல்ல. அவங்க அப்பா உதையை விடவா, உன் உதை? (ராஜுவுக்கு மனம் குமுறுகிறது.)

மணி: டேய் கழித்தல் கணக்கு!

ஜம்பு: டேய், ஒரு ரூபாய் நோட்டு!

மணி: ஏக் தின்கா முதலாளி!

(ராஜு அவமானத்துடன் கண் ணீர் ஆருகப் பெருக வீடு திரும்பு கிருன்.)

காட்சி-5

இடம்: ராஜு வீடு. மாலை மணி 7.

தந்தை; ராஜு எங்கே போனன்?

தாய்: விளையாடப் போனன்.

தந்தை: ஊரிலிருந்து வந்தால் இவனைப் பற்றிய புகார்தான் பெரி தாக இருக்கிறது. படிப்புதான் சரி யாக வரவில்லையென்ருல் கடையில் கூடவா சண்டை! வந்ததும் வராத தும் கணக்குப்பிள்ளை வந்து ஒரு மணி நேரம் அவன் முட்டாள்தனத் தைப் புகழ்ந்துவிட்டுப் போகிருர்.

தாய்: அது மட்டுமா? வீட்டில் டியூஷன் வாத்தியாரிடம் வேறு தகராறு!

(இதற்குள் வாத்தியாரே ஹாலின் உள்ளே வருகிருர்.)

வாத்: வணக்கம்!

தந்: வணக்கம். வாருங்க. (எழுந்து மற்ருெரு நாற்காலியை இழுத்து எதிரே போட்டு) உட்கா ருங்க!

தந்: நல்லது! என்ன பையன் ஏதாவது படிச்சு கிடிச்சு முன்னுக்கு வருவான? முந்தாநாள்கூட பையனை நீங்க கோவிச்சுக்கிட்டிங்களாம்!

வாத்: (உதட்டில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டே) ஆமாம். கோவத்திலே அடிக்கக்கூட அடிச்சுட்டேன்! அப்புறந் தான் அது தவறுன்னு உணர்ந்தேன்.

தந்: ஏன்?

வாத்: பையனும் ஐந்தாம் படிவம் படிக்கிருன். விவரம் தெரிஞ்ச வயசு பாருங்க! எதிர்த்துக்கிட்டா எனக்குக் கஷ்டந்தானே? உங்களுக்கும் வருத்தமா இருக்கும்!

தந்: எனக்கு என்ன வருத்தம்? அவன் பேச இடமே கொடுக்காதீங்க. அப்படிப் பேசினு எங்கிட்ட சொல்லுங்க. நான் பார்த்துக்கிறேன். நீங்க சொன்னபடி படிக்கல்லேன்னு உயிரை மட்டும் வைத்து உடலை உறிச்சு எடுத்தாக் கூட நான் கவலைப்படமாட்டேன். நான்கூட முதலில், 'படிப்பு வரவில்லையே, பள்ளிக்கூடத்தை நிறுத்திக் கடைக்கு அனுப்பிவிடலாம்' என நினைச்சேன். அதுக்கும் உபயோகமில்லைன்னு நேத்து ஒரு நாளில் தெரிந்துவிட்டது. அவனை முன்னுக்குக் கொண்டு வரவேண்டியது உங்கள் பொறுப்பு. (கண்களில் நீர் துளும்ப வாசலிலிருந்தபடி இவைகளைக் கேட்டுக் கொண்டேயிருந்த ராஜு நேராக உள்ளே வந்து அப்பாவின் கால்களில் விழுகிருன்.)

ராஜு: (எழுந்து தழுதழுத்த குரலில்) அப்பா! என்னை மன்னித்து விடுங்கள். நான் இதுவரை செய்த பிழைக்கு உங்களிடம் தாழ்மையுடன் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். படிப்பு இல்லாவிட்டால் இவ்வுலகில் ஒருவன் கௌரவத்துடன் வாழமுடியாது என்பதை இன்றுதான் உணர்ந்தேன். இனிமேல் நீங்கள் சொல்படி கேட்டு நன்ருகப் படித்துப் பாஸ் செய்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள்.

தந்: நான் மன்னித்து விடுகிறேன். ஆனால் உனக்கு நற்புத்தி புகட்டி உன்னை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியவர், இதோ உட்கார்ந்திருக்கிருரே, உன்னுடைய வாத்தியார், அவரை வணங்கி மன்னிப்புக கேட்டுக் கொள்.

(வாத்தியாரை வணங்குகிருன்.)

வாத்: உனக்காக அல்லும் பகலும் கவலைப்படும் உன் தாயையும் வணங்கு. தாய் மனம் குளிர்ந்தால் தான் நீ நன்மை பெறுவாய்.

(ராஜு தாயையும் வணங்குகிருன்.)

தாய்: (மனங் கனிந்து) பெரியோர்கள் சொல்படி நடந்து, பேரும் புகழும் பெற்றுச் சுகமாக இரு! (திரை)



பாட்டரி அடுக்கு

ஈ. ஜி. என்

மின்சாரக் கருவிகள் வேலை செய்யப் பாட்டரிகள் உபயோகப் படுத்தப்படுகின்றன. பாட்டரியிலிருந்து மின்சார ஓட்டத்தைச் செலுத்த பாட்டரியின் இரண்டு முனைகளிலும் கம்பிகளைப் பொருத்தி வைக்கவேண்டும். இதைச் சாதாரணமாகக் கையினால் தான் பிடித்துக்கொள்ள வேண்டும். இதனால் கருவியின் பாகங்களைச் சரி பார்க்க முடியாமல் சிரமம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க என்ன செய்வது என்று ஆராய்ச்சி மனப்பான்மைகொண்ட ராஜமும் ராமுவும் தங்கள் அருமை மாமாவிடம் கேட்டார்கள். மாமா கீழ்க்கண்ட முறையைச் சொல்லிக் கொடுத்தார். நீங்களும் கற்றுக் கொள்ளுங்கள்.

இதற்குத் தேவையான பொருள்கள் சிலவற்றைக் கடைகளில் வாங்க வேண்டும். இதில் உபயோகப் படும் பொத்தான் (Switch) ஒரு முறை அழுத்தப்பட்டால் மின்சாரத்தைச் செலுத்தவும் மற்றொரு முறை அழுத்தினால் மின்சாரத்தை நிறுத்தவும் தக்க முறையில் அமைக்கப்பட்டது.



1. பொத்தான் (Switch) (படம்-2)

2. ஒரு பெருங்காய டப்பி.

3. இரண்டு பிளக்குகள் (Banana plugs and Sockets) படம் 3)

4. துருப்பிடிக்காத மெல்லிய தகரம் அல்லது மெல்லிய பித்தளைத் தகடு. தவிர, அட்டை முதலியவை.

முதலில் அட்டைத் துண்டுகள் இரண்டு தயார் செய்ய வேண்டும். இவற்றைச் செய்வதற்குப் பெருங்காயப் பெட்டியின் நீளம், உயரம் இரண்டையும் கணக்கெடுத்து அந்த அளவை அட்டையில் குறியுங்கள். இந்த மாதிரித் துண்டுகள் 4 தயார் செய்யலாம், அல்லது இரண்டு அட்டைகளிலும் படம் 1-இல் காட்டியபடி செய்யலாம். இதன்பிறகு தகரத் தகட்டில் படம் 1-இல் கீழ்ப் பாகத்தில் காட்டியபடி இரு துண்டுகள் வெட்ட வேண்டும். இதைச் செய்ய D என்ற படத்தில் குறிப்பிட்டபடி தகரத்தின் மேல் வரைந்துகொண்டு அதை வெட்டி எடுத்து மடக்கி விடலாம். இந்தத் துண்டுகளின் அளவுகள் இந்தப் படத்தில் காட்டப்பட் டிருக்கின்றன. B என்று குறிப்பிட்ட பாகத்தின் நீளம் ஒரு பாட்டரியின்



4

நீளத்தைக் குறிக்கிறது. A,C என்று குறிப்பிடப்பட்ட பாகங்கள் பாட்டரியின் குறுக்களவில் பாதியைக் குறிக்கின்றன. இந்த முறையில் இரண்டு துண்டுகள் செய்து விட்டு, பிறகு E என்று குறிப்பிடப்பட்ட வடிவத்தில் இரண்டு துண்டுகள் செய்ய வேண்டும். இவை முடிந்தவுடன், முன்பு தயார் செய்த அட்டைத் துண்டு ஒன்றை எடுத்து அதன் ஓர் ஓரத்திலிருந்து மூன்று பாட்டரிகள் வரிசையாக வைக்கத் தகுந்த அளவுகளைக் குறிப்பிட வேண்டும். இந்த முறையைப் படம் 4-இல் காணலாம். இந்த அளவுகளின் மேல் முன் செய்த தகடுகளைப் பொருத்தும் மாதிரியைப் படம் 1 காட்டுகிறது. இதன் பிறகு பெருங்காயப் பெட்டியை எடுத்து

5





6

அதில் பொத்தான், பிளக்குகள் ஆகியவற்றைப் பொருத்தத் தக்க துவாரங்கள் செய்ய வேண்டும். பெட்டியின் மூடியில் அகல பாகத்தின் ஒரு முனையிலிருந்து சுமார் ½ அங். இடம் விட்டுப் பொத்தானைப் பொருத்தத் துவாரம் செய்ய வேண்டும். பொத்தான் பொருத்தப்பட்ட பின்னர், பெட்டியின் உயர பாகத்தில் பிளக்குகளைப் பொருத்த படம் 5 - இல் காட்டியபடி துவாரம் செய்யுங்கள். இதன் பின்னர் பிளாஸ்டிக் கம்பிகளினுல் கீழ்க்கண்டபடி பிணைத்துவிடுங்கள்.

H என்ற முனையிலிருந்து ஒரு கம்பியை ஒரு பிளக்கில் பொருத்துங்கள். I என்ற முனையிலிருந்து ஒரு கம்பியைப் பொத்தானின் மூலம் மற்ருெரு பிளக்கில்பொருத்துங்கள். பாட்டரிகளைப் பொருத்தும் முறை படம்-6 இல் காட்டப்பட் டிருக்கிறது. பிளக்குக் கம்பிகளை மின்சாரக் கருவியுடன் இணைத்து, அவற்றைப் பிளக்குகளில் பொருத்திப் பொத்தானை அழுத்தி விட்டால் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும். மற்ருெரு முறை பொத்தானை அழுத்திஞல் மின்சாரம் பாய்வது நின்று விடும்.

விடுகதைப் பாட்டு

'சுராஜ்'

இரண்டெழுத்தே உள்ள பேர்
இந்தியாவில் சிறந்த பேர்
பரந்த உலக முழுதிலும்
பலரின் புகழ் பெற்ற பேர்?
மூன்றெழுத்தே உள்ள பேர்
மூக்கண்ணுடி போட்ட பேர்
ஆன்ற பேரறிஞரென்றே
அனைவரும் அறிந்த பேர்?
நாலெழுத்தே உள்ள பேர்
நாம் விரும்பிப் படிக்கும் பேர்
பாலரை உயர்த்தவே
பாடுபடும் அண்ணல் பேர்?
அஞ்செழுத்தே உள்ள பேர்
அறிவின் தெய்வமான பேர்
கொஞ்சு தமிழ் வளர்ப்பதே
கொள்கையாகக் கொண்ட பேர்?

விடை: (நேரு, ராஜாஜி, கண்ணன், கலைமகள்.)

நல்ல நண்பன்

'சாமு'

"கோபூ......" என்று ராமுவின் குரல் கேட்டவுடன் கோபு துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே வந்தான். இருவரும் பள்ளிக்குச் சேர்ந்தே செல்வது வழக்கம். இருவரும் அன்று காலை நடந்த நிகழ்ச்சிகளைக் பரிமாறிக்கொண்டே பள்ளி நோக்கி நடந்தார்கள்.

'சர்....ர்' என்று அப்போது இருவரையும் உரசிக்கொண்டு ஒரு கார் வந்தது. "என்னடா பார்க்கிறீர்கள்? ஏறிக்கொள்ளுங்கள். பள்ளிக்கூடத்துக்குதானே!" என்று சொல்லிக்கொண்டே சோமு காரை நிறுத்தி அவர்களிருவரையும் அழைத்தான்.

ராமு கோபுவைப் பார்த்தான். கோபு ராமுவைப் பார்த்தான்! பிறகு ராமு, "பக்கத்தில்தானே பள்ளி இருக்கிறது? நாங்கள் நடந்தே வந்து விடுகிறோம்" என்று சொன்னான். சோமுவுக்கு ஆத்திரம் பொங்கியது. 'பட்' டென்று கதவைச் சாத்திக் கொண்டு, காரை 'ஸ்டார்ட்' செய்யச் சொன்னான்.

* * *

ராமுவும் கோபுவும் நான்காம் படிவத்தில் படித்து வந்தனர். இருவரும் இணை பிரியாத நண்பர்கள். இருவருமே படிப்பிலே அசகாய சூரர்கள். இந்த நட்பு ஒரு சிறந்த உதாரணந்தானே! இவர்கள் வகுப்பில் படித்தவர்களில் சோமுவும் ஒருவன். ராமுவும் கோபுவும் முதல் படிவம்

படித்த போது மூன்றும் படிவம் படித்த பிரகிருதி இவன்! படிப்பு தவிர மற்றவை யாவும் இவனிடம் பொருந்தியிருந்தன. தவிரவும் பணக்கார வீட்டுப் பையன் சோமு. பிறகு கேட்கவா வேண்டும்! பண் படாத நிலமும், பொறுப்பில்லாத பையனும் ஒன்றுதானே!

இவனது ஆதிக்கத்தையும் ஆண வத்தையும் சிறிதும் லட்சியம் செய்யாதவர்கள் ராமுவும் கோபு வும்! சோமுவுக்கு எப்போதுமே இதனுல் ஆத்திரம்தான்.

மறுநாள் மத்தியான்னம். கோபு வும் ராமுவும் வகுப்பு அறையில் கொண்டு வந்திருந்த பலகாரத் தைச் சாப்பிட ஆரம்பித்தனர். கோபு முதலில் சாப்பிட்டு விட் டான். ஆகையால் முதலில் கை அலம்பிக் கொள்ளக் குழாயடிக்குச் சென்றுன்.

அங்கே இருந்தான் சோமு.

''டேய்! கோபு, இந்தப் பேனு வைக் கொஞ்சம் திறந்து தாயேன்.''

கோபு நிமர்ந்து பார்த்தான். சோமு எதிரே நின்றிருந்தான்.

''கையை அலம்பிக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டுக் கோபு கையை அலம்பிக் கொண்டு வந்தான். பிறகு பேனுவை வாங்கித் திறக்க முயன் முன். ஊஹூம்...திறக்கவே முடிய வில்லை. கோபு முகத்தைச் சுளித் தான். ''போனுல் போகிறது! பாவம்! மிகவும் சிரமப்பட்டு விட் டாய்; இந்தா, இதோ இந்தச் 'சாக்லேட்'டை வாங்கிக்கோ, எங்க சித்தப்பா பம்பாயிலேருந்து வாங்கிண்டு வந்தார்'' என்று சொல்லிவிட்டு, சோமு கோபுவிடம் ஒரு சாக்லேட்டைக் கொடுத்தான்.

உடனே, ''டேய், வாடா! பள்ளிக்கூட்டத்துக்கு வெளியே இருக்கிற கடைக்குப் போகலாம்'' என்று கோபுவின் பதிலைக்கூட எதிர் பார்க்காமல் அவனுடைய கையைப் பிடித்திழுத்துக் கொண்டு போய் விட்டான் சோமு.

''இருடா...இழுக்காதே. ராமு இங்கே வருவான்'' என்று கோபு சொன்னதையும் காதிலே வாங்கிக் கொள்ளாமல் விடாப் பிடியாக அழைத்துச் சென்று விட்டான் சோமு. ராமு கையலம்பிக்கொண்டு வந்த போது கோபு அங்கே இல்லாதது அவனுக்கு ஆச்சரிய மாக இருந்தது. வாசல் கடையில் சோமு, கோபுவுக்கு மிட்டாய், பிஸ்கட் எல்லாம் வாங்கிக் கொடுத் தான். பிறகு மெதுவாக, ''கோபு, இன்னிக்குச் சாயங்காலம் சினிமா வுக்குப் போகலாமா? எங்கிட்டே 'பாஸ்' இருக்கு'' என்றுன்.

'சினிமாவுக்கா?...... நானு?'' கோபுவின் கண்கள் ஆச்சரியத் தால் அகல விரிந்தன. ஆனுல் மறு கணமே, ''நான் வரல்லே...அப்பா திட்டுவார்'' என்று சொல்லி விட்டான்.

சோமு இதைக் கேட்டுவிட்டுப் பெரிதாகச் சிரித்தான்.

''அட பயந்தாங் கொள்ளி! இதுக்கா பயந்து சாகறே? படிக்க 'பிரண்ட்' வீட்டுக்குப் போறேன்னு சொன்னு, நீ வந்த விஷயம் யாருக் குத் தெரியப்போகிறது? ஜாலி யாகக் காரிலே போய் விட்டு வந்து விடலாம்'' என்றுன்.

''பயமா இருக்குடா'' என்றுன் கோபு. ''பயப்படா தேடா....ஆனுல் அந்தப் பயல் ராமுகிட்டே சொல்லி விடாதே... அவன் திருடன்; கோள் மூட்டி விடு வான்'' என்றுன் சோமு.

''ஏண்டா சோமு, அப்படிச் சொல்றே! அவன்தான் நம்ப வகுப்பிலேயே நல்லவன்'' என்றுன் கோபு.

''நீ இந்த வருஷம்தான் இந்தப் பள்ளிக் கூடத்திலே படிக்கிறே! உனக்கு ஒன்றும் விஷயம் தெரியாது: என் பேனுவைப் போன வருஷம் திருடிட்டான்.... எங்க சித்தப்பா பம்பாயிலேயிருந்து வாங்கிண்டு வந்தது.——இன்னும் நிறைய விஷயம் இருக்கு. பாவம்! உனக்கேன் அதையெல்லாம் சொல்லணும்!'' என்றுன் சோமு.

கோபுவுக்கு இதைக் கேட்டதும், முதலில் நம்பா விட்டாலும் சோமு சொன்ன தோரணையில் ஏமாந்து விட்டான்.

அப்போது ராமு அந்தப் பக்கம் வந்தான். ஆனுல் கோபு அவனைக் கவனிக்காத மாதிரி இருந்து விட்டான்.

''கோபு...'' என்று ராமு கூப்பிட்டான்.

''நான் உன்னோடே பேச மாட்டேண்டா!'' கோபு ராமுவை லட்சியம் செய்யாமல் பதிலளித்தான்.

* * *

சோமுவிடம் நட்பு வைத்துக் கொண்டது முதல் கோபு வீட்டிலேயே தங்குவது இல்லை. எப்போதும் சினிமா, டிராமா என்று ஊர் சுற்றிக்கொண்டிருந்தான். அப்படி எதுவும் இல்லாவிட்டால் அவனைச் சோமுவுடன் நிச்சயமாகப் பள்ளிக்கு எதிரிலிருந்த கடையிலே பார்க்கலாம்.

சோமுவின் நண்பன் ஆன முதல் கோபுவிற்கு மார்க்குகளெல்லாம் குறைந்தன. மாதப் பரீட்சையில் ஆங்கிலத்தில் முதலாக வருகின்ற அவன் 'பாஸ் மார்க்' கூடப் பெறுதபடி பரீட்சை எழுதியிருந்தான். காலையில் எழுந்து ஒழுங்காகப் பாடம் படித்துவிட்டு அம்மாவுக்குக் காய்கறி வாங்கிக்கொடுத்து உதவும் அவன், எட்டு மணிக்கு எழுந்து சோம்பேறித்தனமாய் பாடங்கள் படிக்காமல் சோமுவோடு ஊர் சுற்றிக்கொண்டிருந்தான். 'மரியாதை தெரிந்த பையன்' என்று எல்லோருடைய மதிப்பைப் பெற்ற அவன் மரியாதை என்னும் வார்த்தையின் மதிப்பையே அறியாதவனாகி விட்டான்;

காரணம்?

தின்பண்டத்திற் சேர்ந்து தீஞ்சுவை அளிக்கவல்ல சர்க்கரை, தீயிலே விழுந்து தீய்ந்து போவது போல, ராமுவோடு சேர்ந்து நல்ல பையன் என்று நற்பெயர் பெற்ற கோபு, சோமுவோடு சேர்ந்து சோம்பேறியாக மாறிவிட்டான்.

அவனுக்கே மனத்தின் ஒரு மூலையில், ''ஐயோ! நாம் சோமுவோடு சேர்ந்து கெட்டுப் போகிறோம்'' என்ற எண்ணம் எழாமல் இல்லை. ஆனாலும் சோமு வந்து கூப்பிடும் போது அவன் கால்கள் தாமாகவே அவனுடன் போயின.

கெட்டவை எவ்வளவு சீக்கிரம் பற்றிக்கொண்டு பிறகு அகலவே மறுக்கின்றன!

கோபுவுக்கு வரவர பாடங்கள் என்றாலே வேப்பங்காயாய்க் கசந்தன. ஆண்டுத் தேர்வுக்கு ஒரு மாதம்தான் இருந்தது.

அன்றைக்கு—

கோபு வீட்டிற்கு, சோமு வந்தான். ''டேய்! அவசரமாகப் பத்து ரூபாய் வேண்டுமடா! எப்படியாவது தா'' என்றான்.

''பத்து ரூபாயா....நான் எங்கேடா போவேன், பத்து ரூபாய்க்கு?...பத்துப் பைசாகூடக் கிடையாதே..'' என்றான் கோபு.

''நாம் ரெண்டு பேரும் நாயர் கடையிலே தினமும் நிறையத் தின்பண்டம் வாங்கினோம் அல்லவா? அவனுக்குப் பணம் கொடுக்கணும். நாம்தான் தினமும் 'டிமிக்கி' கொடுத்திண்டு இருந்தோமே! இன்னிக்கு எப்படியோ அவன் கிட்டே அகப்பட்டுக்கொண்டு விட்டேன். ''இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்

குள்ளே அவன் கடைக்கு வந்து பணத்தைக் கொடுக்காட்டா நாளைக்கு என் அப்பா கிட்டேயும் உன் அப்பா கிட்டேயும் வந்து சொல்லிப் பணத்தைக் கேட்கப் போகிருனும்'' என்ருன்.

கோபுவுக்குத் 'திக்'கென்றது!

''அப்பாகிட்டே வந்து சொல்லி விடுவாஞ..?'' என்று கேட்டான்.

''ஆமாண்டா....இத்தனை நாள் வீட்டிலேயிருந்து அப்பாவுக்குத் தெரியாமல் பணத்தை எடுத்துண்டு வந்தேன். தினமும் பணம் காணு மல் போகிறதைப் பார்த்த அப்பா பணத்தை உள்ளே எடுத்து வைக்க ஆரம்பிச்சுட்டார்....'' என்ருன் சோமு.

''அப்படீன்னு, நீ தினமும் கொண்டு வந்த பணம் திருட்டுப் பணமா?'' என்று கோபு திகி லுடன் கேட்டான்.

சோமு தலையை மாத்திரம் அசைத்தான். என்ன நெஞ்சழுத் தம்!

கோபுவின் நெஞ்சம் குழம்பியது. ''ராத்திரி ஒன்பது மணிக்கு வாடா. எப்படியாவது அஞ்சு ரூபாய் கொடுக்கிறேன்'' என்று சொல்லி விட்டு அவன் சோமுவை அனுப்பி விட்டான்.

மறுநாள் கடைக்காரன் தன் அப்பாவிடம் வந்து சொல்வதாக நினைத்தபோது அவன் உடல் நடுங் கியது; கெட்டதற்குள் சிக்கி விட் டால் மீளவே முடியாது போலிருக் கிறதே என்று அவன் மனம் ஏங்கி யது.

கோபு வீட்டைவிட்டு வெளியே வந்தான்; கால்கள் தள்ளாடின. உடல் சோர்ந்தது. பாவம், கால் போனபடி நடந்தான்.

அவன் செய்த அக்கிரமங்களை யெல்லாம் நினைத்துப் பார்த்தான். ''எத்தனை தடவை கணக்கு உபாத் தியாயரை ஏமாற்றிவிட்டுக் கணக்கு வகுப்புக்கு மட்டம் போட்டிருக் கிரேம்! அப்பாவுக்கும் அம்மா வுக்கும் தெரியாமல் சோமுவோடு எத்தனை முறை ஊர் சுற்றியிருக்கி ரேம்'' என்பதை எண்ணியபோது உடல் சிலிர்த்தது; கண்களிலிருந்து நீர் வழிந்தது.

இத்தனைக்கும் காரணம் சோமு வின நட்பு என்பதை உணர்ந்தான். ''ராமுவிடம் போய் மன்னிப்புக் கேட்டு....'' என்று அவன் நினைக்கும்போதே அவன் மனம், ''சீ! உனக்கு வெட்கமில்லை!'' என்று கூறியது.

தலை தட்டாமாலையாகச் சுற்றி யது. கோபு தலையை இரு கைகளா லும் அழுத்திப் பிடித்துக் கொண் டான்.

அப்போது—

''கோபு..'' என்று பின்னுலே யிருந்து குரல் கேட்டது.

கோபு திரும்பிப் பார்த்தான். கூப்பிட்டது ராமு!

அவஞல் பேச முடியவில்லை, மனம் துக்கத்தைத் தாங்க மாட் டாமல் அழுந்தியிருந்தது. ராமு வைக் கண்டதும் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது.

''கோபு! நீ எதுக்குக் கவலைப் படறேன்னு எனக்குத் தெரியும். நான் தருகிறேன் ரூபாய்..!'' என்று ராமு சொல்லிக்கொண் டிருக்கும்போது ''நீதானடா என் உண்மை நண்பன்..'' என்று அழுகை கலந்த குரலில் கோபு சொல்லிக்கொண்டே ராமுவைக் கட்டிக் கொண்டான்.

''அழாதேடா! எனக்கு அப்பவே தெரியும். நீ அந்தச் சோமுவோட சேர்ந்தபோதே நான் உன்னைக் கண்டிக்கலாம் என்று நினைச்சேன். எப்போதுமே ஒருவரோடு நட்பு வைத்துக் கொள்ளும்போது அந்த நட்பின் பயன் நன்மையா, தீமையா என்பதை நன்ருக அறிந்துகொள்ள வேண்டும். தீய நட்பு பூண்டு விட் டால் சேற்றில் விட்ட காலைப்போல நாம் சீக்கிரம் மீளமுடியாது'' என் ருன் ராமு.

மறுபடியும் ராமுவும் கோபுவும் இணைபிரியா நண்பர்களாயினர். மாணிக்கத்தின் மீதிருந்த தூசி நீங்கி மறுபடியும் பிரகாசிக்க ஆரம்பித்தது.

சைனா ச்சூ



ஆர்வி

ஷங்கங் கம்பளியைப் பிடித்து இழுத்ததும், கறுப்புக் கம்பளி குனிந்து இடறியதும், 'ஹோ' என்ற கூச்சல் எழுந்ததும் எல்லாம் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. ஒரு விநாடிதான்!

ஷங்கங் மூடிய கண்களைத் திறந்தான். அவன் கண்களை அவனால் நம்பமுடியவில்லை. கறுப்புக் கம்பளிப் போர்வையினுள் மறைந்திருந்த முகத்தைப் பார்த்தவுடனேயே அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் தன் கண்கள் பார்த்தது உண்மைதானா என்று உறுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் பார்ப்பதற்குள் அந்த உருவம், கீழே நழுவி விழுந்த கம்பளியை அள்ளிச் சுருட்டிக்கொண்டு, தபதபவென்று வெளியில் ஓடத் தொடங்கியது. அந்தச் சத்தம் மட்டும் கேட்காமல் இருந்திருந்தால் ஷங்கங் பாடு ஆபத்தாகப் போயிருக்கும். பார்த்த கண்ணைத் தோண்டி எடுத்துக் கொண்டுதான் அந்தக் கம்பளி போர்த்திய ஆள் போயிருப்பான்.

அப்படிச் சத்தம் போட்டது யார்? அந்தச் சத்தம் ஷங்கங்குக்குப் பின்னாலிருந்த ஜன்னலிலிருந்து கேட்டது. ஜன்னலுக்கு வெளியே தெரிந்த இரண்டு உருவங்கள்தான், உள்ளே நடந்தவற்றைப் பார்த்துவிட்டுக் கத்தின. அவர்கள் பாராக்காரர்கள். துப்பாக்கி வெடிச் சத்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டு வந்தவர்கள். அவர்கள் அடுத்த மோட்டார் எஸ்டேட்டைச் சேர்ந்த காவலாளிகள். அவர்கள் போட்ட பாராச் சத்தத்தில்தான் கறுப்புக் கம்பளிக்குக் கதிகலங்கிவிட்டது. கம்பளியை இழுத்து, ஆளைப் பிடிக்க யாரோ வந்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பயந்து நடுங்கிவிட்டது. 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்பதுபோல, கம்பளியை இழுத்தது யார், அங்கே நின்றவன் யார், சத்தம் போட்டவர்கள் யார் யார் என்பது ஒன்றையும் கவனியாமல் அந்த உருவம் ஓட்டமாய் ஓடிவிட்டது.

அது வரையில் ஷங்கங்கின் நல்ல காலந்தான். அவனுக்கும் முதலில் பயமாகத்தான் இருந்தது. கறுப்புக் கம்பளியோடு இன்னும் யாராவது வந்திருக்கிறார்களோ என்று நடுங்கி, சுவர் ஓரமாகச் சிறிது நேரம் ஒண்டிக்கொண்டு நின்றான். ஜன்னலுக்கு வெளியே சத்தம் போட்டவர்கள், புரியாத மொழியில் பேசிக் கொண்டே வெகு தூரம் போனார்கள் என்று தெரிந்த பின்னர்தான் ஷங்கங் அந்த இடத்தைவிட்டு வெளியில் வந்தான். வெளிப்புறத்து மரத்தடியில் சீனனுடைய வண்டி தயாராக நின்றது. ஷாபர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, தயாராக இருந்தான்.

ஷங்கங் வந்து வண்டியில் பாய்ந்து ஏறிக்கொண்டதும் வண்டி பாரிஸ்டர் வேதாசலத்தின் வீடு நோக்கிப் புறப்பட்டது. அதன் பின்னர்தான் ஷங்கங் முன்னே

குறிப்பிட்டபடி, ''பட்சி பறந்து விட்டது'' என்று கூறினன்.

அவன் சொன்னதை ஒருவரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

ஷங்கங் மீண்டும், ''கிங்கிங் கையோ அவனுடைய கையாளையோ உங்களால் பிடிக்க முடியாது. இந்த இடத்தை விட்டுப்

போனவன் இந்நேரம் கப்பலேறி யிருப்பான். அவனுடைய கையாள் யாரென்பதை உங்களால் ஊகிக்கவே முடியாது'' என்ருன்.

இன்ஸ்பெக்டர் துரைராஜுக்கு இது ரோசமாகப்பட்டது.

''தம்பி, அப்படியெல்லாம் பேசாதே. மாஸ்டர் சீனனுடைய நண்பன் என்பதற்காகப் பேசாமல் இதைப் பொறுக்கிறேன். வேறு யாராக இருந்தாலும் இந்த வார்த்தை சொன்னதற்கு இந் நேரம் நடப்பதே வேறாக இருக்கும். எங்களால் கண்டுபிடிக்கமுடியாது என்று சொல்வது எங்களை அவமதிப்பதுபோல! தெரிகிறதா?'' என்றார்.

''தெரிகிறது. ஆனால் உங்களை நான் அவமதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் தேடிக் கண்டுபிடிப்பதற்குள் அந்தக் கப்பல் சிங்கப்பூர் போய்விடும். அப்புறம் நீங்கள் கண்டுபிடித்தாலும் ஒன்றுதான் கண்டுபிடிக்காவிட்டாலும் ஒன்றுதான். அதற்காகத்தான் சொல்கிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்!'' என்றான் ஷங்கங், முகத்தை ஒன்றும் தெரியாத சாதுபோல வைத்துக்கொண்டு.

''அப்படியானால் அவனுடைய கையாள் யார் என்பதை உன்னால் ஊகிக்க முடியுமா?'

''முடியும்.''

''போலீஸ் என்றால் இப்படித்தான் சில பேருக்குத் தப்பான அபிப்பிராயம். அவர்கள் எல்லாம் முக்காலமும் உணர்ந்த ஞானிகளா? உங்களுடைய நிலையைத் தெரிந்து கொண்டு, நீங்கள் தரும் தகவல்களிலிருந்து உண்மைக் குற்றவாளியை ஊகித்துத் தேடுவதே எங்கள் வேலை. போலீஸ் இலாகா

வில் புத்திசாலிகளும் உண்டு; மந்த புத்தியுள்ளவர்களும் உண்டு. உங்கள் கேஸ் வெற்றிகரமாக முடிய வேண்டும் என்ருல் எங்களைச் சோதிப்பதில் அர்த்தமில்லை. நீங்கள் உங்களுக்குத் தெரிந்த தகவல்களையெல்லாம் ஒளிவு மறைவு இன்றிச் சொன்ருல்தான் முடியும். இல்லாவிட்டால் எங்களுக்கு என்ன வந்தது?''

''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். அதனுல்தான் உங்களால் ஊகிக்கக்கூட முடியாததை நான் சொல்வதாக இப்போதும் சொல்கிறேன்..''

''ஷங்கங்! பேச்சை வீணுக ஏண்டா வளர்த்தறே? விஷயத்தை உடனே சொல்லாமல் அவர் கோபப்படுகிருர் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிருயே..சட்டென்று யார் என்பதைச் சொல்!'' என்ருன் சீனன்.

''சொல்வது என்ன! இப்போதே நாம் எல்லாருமாக அங்கே புறப்பட்டுப் போக வேண்டியதுதான். நீயும் நானும் உதவிக்கு இரண்டு போலீஸ்காரர்களுடன் போனுல் கையும் மெய்யுமாக உடனே பிடித்துவிடலாம்...உம்; புறப்படு!'' என்ருன் ஷங்கங்.

''நீயும் நானுமா? அப்படியானுல் அவன் நமக்குத் தெரிந்தவனு?''

''ஆமாம்.''

''யார் அது?''

''போகும்போது வழியில் சொல்கிறேன். அவர்கள் அவர்களுடைய வானில் பின்னுல் வரட்டும்.''

அப்படியே அவர்கள் இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து புறப்பட்டார்கள். பாரிஸ்டர் எழுந்து படுக்கைக்கு அடியிலிருந்த உயில் கட்டுகளைப் பத்திரப் படுத்திவிட்டு, தம் வேலையைக் கவனிப்பதில் ஈடுபட்டார்.

முன்னுல் சீனனுடைய வண்டியும் பின்னுல் போலீஸ் வானும் மௌண்ட்ரோடில் ஸ்பென்சர் வழியாகப் போய்க்கொண்டிருந்தன. கூவம் ஆற்றுச் சாலை திரும்பியதும், ''ஆமாம்; வண்டி ஏன் இங்கே போகிறது?'' என்ருன் சீனன்.

''முதலில் உன் சிற்றப்பன் சின்னப்பக்கிரியைப் பார்க்க வேண்டும்!''

''எதற்கு?'' என்று திகைப்போடு கேட்டான் சீனன்.

ஷங்கங் அவனுடைய காதோடு எதையோ சொல்லவே சீனனுக்கு மண்டையில் ஓங்கித் தாக்கியது போலிருந்தது.

''நிச்சயமாகவா, நிச்சயமாகவா?'' என்று வாய் குளறக் கேட்டான்.

''நிச்சயமாகத்தான்! என் கண்கள் என்னை ஏமாற்ருமல் இருந்தால்?'' என்ருன் ஷங்கங்.

கூரைக் குடிசைகள் இருந்த இடம் வந்ததும் வண்டிகள் ஓர் ஓரமாக நின்றன. முதலில் சீனனும் ஷங்கும் வீட்டுக்குப் போய், கதவை இடிக்கவேண்டும். அதற்கு மேல் விபரீதமாக ஏதாவது நடக்கும்போலிருந்தால் வீட்டைச் சுற்றிலும் மறைந்திருக்கும் போலீசாரைக் கூப்பிட வேண்டும் என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். சின்னப் பக்கிரியோ பொல்லாதவன்; அவன் மனைவி காளியோ அதைவிடப் பொல்லாதவள். சீனன் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யவில்லை. அதனுல் அவர்கள் அவன்மீது கோபமாக இருந்தார்கள். அந்தக் கோபத்தில் அவர்கள் அவனைத் துன்புறுத்தலாம், அல்லவா? அதற்காகவே போலீஸ் கோஷ்டி மறைந்திருக்க வேண்டும் என்று ஏற்பாடு.

குடிசைகள் இருளடர்ந்த பிரதேசத்தில் முட்டு முட்டாகக் காட்சியளித்தன. எல்லாக் குடிசைகளுமே உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தன. கூவம் ஆறு, கரிய மலைப் பாம்பு இரையை விழுங்கிவிட்டு அசைய முடியாமல் நீண்டு கிடப்பதுபோல் காணப்பட்டது. அதன் தண்ணீரின் நாற்றம் வயிற்றைக் குமட்டியது. அந்தப் பிரதேசத்தில் விளக்குகள் இல்லாததால், பாதை தெரிந்து, வளைந்து வளைந்து செல்வதே கஷ்டமாக இருந்தது. சீனனும் ஷங்கங்கும் இந்த இருட்டில் நடந்து நடந்து பழக்கமானதால் அவர்கள் வெகு எளிதாகச் சந்தையும் பொந்தையும் கடந்து ஆற்றின் கரை ஓரமாக

இருந்த தனிக் குடிசைக்கு வந்தார்கள்.

அந்தக் குடிசைக்குப் பின்புறத்தில் ஆறு ஓடியது. ஓட்டைப் படகுகள் இரண்டு அதன் கரை ஓரமாக ஒதுக்கப்பட்டிருந்தன. படகைச் செலுத்தும் நீண்ட கோல் ஒன்று குடிசை ஓரமாகச் சாத்தப்பட்டிருந்தது. நட்சத்திரங்களின் ஒளிதான் மங்கலாகத் தெரிந்தது. எதிரே வருபவனை மிக அருகில் வந்தால்தான் தெரிந்துகொள்ள முடியும். அதுவும் நல்ல வெளிச்சத்திலிருந்து வந்தவர்களுக்கு, நல்ல வெளிச்சத்திலேயே பழகியவர்களுக்கு அதுகூடத் தெரியாது. ஆள்மீது முட்டிக்கொண்டால்தான் தெரியும்.

குப்பை மேட்டு நாய்கள் இரண்டு வேற்று ஆட்களைக் கண்டதும் 'வாள் வாள்' என்று மாற்றி மாற்றிக் குலைத்தன. நல்ல ஆடை உடுத்துக் கொண்டவர்களை அவை பார்த்ததில்லை.

கந்தலும் கிழிசலும் தாடியும் மீசையுமாக வருபவர்களைக் கண்டால்தான் அவை மனிதர்களாக எண்ணி வாயை மூடிக் கொண்டிருக்கும்; நல்ல சட்டை வேஷ்டியுடன் வந்தால் அவை இப்படிக் குலைப்பது வழக்கந்தான். அதனல் நாய் குரைக்கிறதே என்று அந்தச் சேரியில் யாரும் கலவரமடைவதேயில்லை; தூக்கத்தைக் கெடுத்துக்கொள்வதுமில்லை.

கரையில் ஒதுக்கியிருந்த இரண்டு படகுகளில் ஒன்று மட்டும் கோலோடு பாதிப் பாகம் தண்ணீரிலும் பாதிப் பாகம் தரையிலுமாக நின்றது. அதைப் பார்த்தால் எந்த நிமிஷத்திலும் அது கிளம்புவதற்குத் தயாராக நிறுத்தப்பட்டிருந்தது போலிருந்தது.

'ஙொய்' என்று காதைத் துளைப்பதுபோல் கரிச்சான் கத்தியது. சில தவளைகள் எங்கிருந்தோ 'கொடாக், கொட கொடாக்' என்று இருட்டின் பயங்கரத்துக்குத் தாளம் எழுப்பின. நீர் வாழ் ஜந்துக்கள் காலடி ஓசை கேட்டுத் தண்ணீரில் சள சள வென்று பாய்ந்தன. 'கிர் கிர் கிர்' என்று ஏதோ ஒரு பூச்சி நிறுத்தி நிறுத்திக் கத்தியது.

சீனனும் ஷங்கங்கும் சின்னப் பக்கிரியின் குடிசையை அடைந்தார்கள். பனை ஓலையும் வைக்கோலும் வேய்ந்த அந்தக் குடிசை இருளில் முட்டுப்போலக் கவிந்திருந்தது. துருவேறிய தகரங்களால் ஆன கதவு சாத்திக் கிடந்தது. உள்ளே விளக்கு வெளிச்சம் இருப்பதற்கான அறிகுறியே காணேம்.

ஆனல் இரண்டு குரல்கள் மட்டும் கிசுமுசு வென்று முணு முணுப்பதை வாசலில் நின்ற நண்பர்கள் இருவரும் உணர்ந்தார்கள். 'குத்து, வெட்டு' என்ற வார்த்தைகள்கூடக் காதில் விழுந்தன. சற்றைக் கெல்லாம் கடப்பாரை டணர், டணர் என்று இடிபட்டது.

சீனனுக்கு அந்த இருட்டில் நிற்பதற்குப் பயமாக இருந்தது. இருளோடு நன்கு பழகிய அவர்களுக்கே அந்த நேரத்தில் இடிப்பதும், முணு முணுப்பதும் அச்சத்தைத் தத்தன.

கதவருகில் போய் நின்ருன் சீனன். வெளியில் தட்டி மறைவில் நின்ருன் ஷங்கங். திடீரென்று தட்டிக்குக் கீழே இருந்த புருப் பெட்டியடியில் வெள்ளையாக ஏதோ ஒன்று அசைவதைப் பார்த்தான் ஷங்கங். நெஞ்சு 'சொரக்' கென்றது. உற்றுப் பார்த்தான். பார்க்கும் போதே இரண்டு நெருப்புத் துண்டங்களை வைத்ததுபோல, இரண்டு ரத்தினங்கள் ஜொலிப்பது போல ஒரு பிரகாசம் தோன்றியது. ஷங்கங் ஓர் அடி பின்வாங்கினன். டக்கென்று மண்டையில் ஓர் அடி. வேறென்றுமில்லை; கூரையின் விட்டத்தில்தான் அவன் தலை இடித்தது.

நெருப்புப் பந்து மெல்ல நகர்வதுபோல் இருந்தது. உண்மையில் ஷங்கங்கின் நெஞ்சு துடிக்கத் தொடங்கியது. வர வர அது முன்னேக்கி வருவது நிச்சயமாகத் தெரிந்தது. அவன் பார்த்துக் கொண்டேயிருந்தான். உள்ளே 'டங், டங்' என்று கடப்பாரை இடிக்க இடிக்க நெருப்புப் பந்தும் வெள்ளை உருவமும் அவனை நோக்கி

முன்னேறி வந்தன. அவன் மூச்சு நின்றுவிடும்போல் தேங்கியது.

சீனன் கதவருகிலே நின்ருன். கைகள் வெலவெலத்தன; ''இடி; உடை!'' என்ற மெல்லிய முணு முணுப்பு அடித் தொண்டையில் வலுவான சொற்களாகக் கேட்டன. இருட்டில் வீட்டின் மூன்றுபுறமும் போலீஸ்காரர்கள் கையில் தடியுடன் எச்சரிக்கையாக நின்ருர்கள். படகுக்கு அருகில் இன்ஸ்பெக்டர் துரைராஜ் நின்றுகொண்டிருந்தார்.

''ஐயோ! சீனு!'' என்று வீரிட்டான் ஷங்கங்.

அடுத்த கணம் சீனன் உளறியடித்துக்கொண்டு தகரக் கதவின் மேல் விழுந்தான். அந்த அதிர்ச்சியில் தகரம் படபடவென்று ஓசை எழுப்பியது. ஷங்கங் வெளியில் கவிழ்த்திருந்த பானை சட்டிகளின் மேல் உருள, பானைகள் உடைய, சட்டிகள் கவிழ்ந்து நொறுங்க, 'பே பே' என்று வாய் அரற்றக் கீழே தடுமாறி விழுந்தான்.

''யாரு?'' என்று ஒரு பெண் குரல் பயங்கரமாக அதட்டியது.

சீனன் தடுமாறி எழுந்து, ஓடுவதற்குத் தயாராக ஒரு காலை முன்னுலும் ஒரு காலைப் பின்னுலுமாக வைத்துக்கொண்டு நின்ருன்.

''அட, எவண்டா அவன்?'' என்று அந்தக் குரல் மீண்டும் கர்ஜிப்பதுபோல் இருளைக் கிழித்துக் கொண்டு கேட்டது.

''நா..நா..நான்தான்!'' என் ருன் சீனன்.

''என்னடா கேக்கறேன்; நான் தான்றியே! நான்னு எவண்டா அது?'' என்று படீரென்று தகரத் தட்டிக் கதவு அரைகுறையாகத் திறந்து கொண்டது.

சீனன் வாயிற்படியில் இடறி விழாமல் நின்றதே பெரிய சாதனை. கதவின் உட்புறத்தில், காளியின் பயங்கர உருவம் தெரிந்தது.

''யாரு—யாருடா நீ?''

''நா ன்..தான்......சீ..சீ.. சீன்..''

''சீனனு?''

''ஆஆஆ..'' தலையை உலுக்கிப் பேச முயன்ற சீனன் வெறும் திக்கலோடு நின்றுவிட்டான்.

''யாரவன்? சீனன் பயலா? சீனன் பயலா வந்திருக்கிருன்? ஹாங்!' என்று காளிக்குப் பின்னுலிருந்து மற்ருெரு பேய்க்குரல் ஒன்று உறுமிக்கொண்டு வந்தது.

'வீல்' என்று மறுபடியும் ஓர் அலறல்.

எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். கையில் ஒரு சிமினி விளக்குடன் காளி வெளியில் வந்தாள். சீனனும் திரும்பிப் பார்த்தான். கொழுத்த வெள்ளைப் பூனை ஒன்று வாயில் எதையோ கவ்வியவாறு தகரத்தட்டிக் கதவிடுக்கில் பாய்ந்தது.

''பூ..பூ..பூனை!'' என்று உளறியடித்துக் கொண்டு எழுந்த ஷங்கங், ''ஹி..ஹி..பூனை!'' என்று தன்னையே தேற்றிக் கொண்டு எழுந்தான்.

அடுத்த கணம் இன்ஸ்பெக்டர் துரைராஜ், ''இங்கே என்ன சத்தம்?'' என்று அதிகாரக் குரலில் கேட்டவாறு வாசலுக்கு வந்தார்.

அவர் தலை தெரிந்ததோ இல்லையோ, பின்னுல் கடப்பாரையுடன் காணப்பட்ட சின்னப் பக்கிரி சடக்கென்று பின்வாங்கி, தன் தலையை மறைத்துக் கொண்டான்.

''அதோ..அதோ.. அவர்தான் கறுப்புக் கம்பளி! பிடியுங்க..பிடியுங்க!'' என்று கூவினுன் ஷங்கங்.

எல்லாரும் வீட்டின் முன்புறமாக வந்து கூடினுர்கள். இன்ஸ்பெக்டர் தைரியமாக, காளியை, ''போ, அந்தப் பக்கம்!'' என்று மிரட்டி ஒதுக்கிவிட்டு வீட்டினுள்ளே நுழைந்தார். அடுத்த கணம் மிரண்டு அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்.

''ஆ! மண்டை ஓடு! பிசாசு!'' என்று கூவினுர்.

பிறகு இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து தைரியத்தோடு, முன் ஜாக்கிரதையாகக் கையில் தடியை ஓங்கியவாறு உள்ளே நுழைந்தார்கள். இன்ஸ்பெக்டரை மிரட்டிய மண்டை ஓட்டைக் காணவில்லை.

(தொடரும்)

முகமூடித் திருடன்

கமலி

எதிர்வீட்டுக் குடித்தனக்காரர்கள் இரண்டு வீடுகளிலும் சினிமாவுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார்கள். குழந்தைகளின் கும்மாளமும் பெரியவர்களின் அலங்காரமுமாக வீடு தடபுடல் பட்டுக்கொண்டிருந்தது. பட்டுப் பகட்டு உடைகள் அணிந்து பக்கத்து வீட்டுக் குழந்தைகள் வெளியே செல்லத் துடித்து நின்றபோது, கமலபதியின் மனத்தின் ஏக்கம் நிழலாடியது. ''அப்பாமட்டும் வழக்கம்போல ஐந்து மணிக்கு வந்திருந்தால்?....''

வந்திருந்தால் அவனும் அப்படித்தான் குஷியாகக் கிளம்பிக்கொண்டிருப்பான். கடிகாரத்தின் முட்கள் அப்படியே அசையாமல், ஐந்து மணியோடு நின்றுவிடக் கூடாதாவென்று எண்ணிய எண்ணங்களும் அதன் விளைவாக எழுந்த பெருமூச்சுக்களும் எத்தனையோ! ஐந்தேகாலுக்குள்ளாவது அப்பா வந்து சேர்ந்துவிட வேண்டுமென்று வேண்டிக்கொண்ட பிரார்த்தனைகள் அத்தனையும் வீண்.

ஐந்தரை ஆகியும் கருணாகரன் வராதுபோகவே, எதிர்வீட்டுக்காரர்கள் இருவரும் புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

அவர்கள் போய்விடவே சோகமே உருவெடுத்திருந்தான் கமலபதி. ''வீட்டைக் கவனமாகப் பார்த்துக்கோ. ஊரெல்லாம் திருட்டு, கொள்ளை யென்று பேசிக்கொள்ளுங்க. எங்கே திரும்பினாலும் திருட்டுப் பேச்சாகவே இருக்கிறது. நான் தோட்டப் பக்கம் போகிறேன். வீட்டை ஜாக்கிரதையாக் கவனித்துக்கொள்'' என்று தாயார் பல தடவை சொல்லிவிட்டுப் போனாள்.

கமலபதிக்கு ஒரே சூன்யம். சினிமாப் போகாத ஏமாற்றம்; விளையாடலாமென்றாலோ பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் இல்லை. வெளியே சென்று விளையாடலாமென்றாலும் அம்மா காவலாளியாக நியமித்துப் போய்விட்டாள். எங்கே தான் போவது? எப்படித்தான் பொழுதைப் போக்குவது? நல்ல வேளையாக அவன் தங்கை அவனைக் கதை சொல்லும்படி கேட்டாள்.

அவன் கதை சொல்ல ஆரம்பித்தான். அவன் படித்த ஒரு திருடன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். கதையைச் சொன்னால் பயம் போகும் என்ற எண்ணம். தங்கை கதையைச் சுவாரஸ்யமாகக் கேட்டாள். கதையைச் சொல்வதோடு கதை கேட்கும் வயசில்லாத தம்பி தங்கைகளைக் கவனித்துக் கொண்டும் இருந்தான். தங்கைக்குக் கதை புரிந்ததோ இல்லையோ, கமலபதிக்கு நன்றாகப் பொழுது போயிற்று.

வேலையை முடித்துவிட்டு வந்த தாயார் விளக்கேற்றிய பின் குழந்தைகளைப் பூஜைக்கு அழைத்தாள். தாயாரின் அழைப்பிற்கிணங்க குழந்தைகளும் கைகால் அலம்பிக் கொண்டு பூஜைக்குத் தயாராய் வந்தார்கள்.

மெழுகிக் கோலமிட்ட மணையின் மீது வெண்கலக் குத்துவிளக்கு தங்கத் தகாயமாய் மின்னிக் கொண்டிருந்தது. விளக்கின் இரு மருங்கிலும் சின்னஞ் சிறிய ஒளி விளக்குகள் ஜகஜ்ஜோதியாக மின்னிக் கொண்டிருந்தன.

பூஜை ஆரம்பமாகியது. கமகமவென்ற சாம்பிராணியின் மணம், கும் கும்மென ஊதுவத்திச் சுருளிலிருந்து எழும் வாசனை, சுவாமி

படங்களுக்குச்சூடியிருந்த மல்லிகையின் மணம்,எல்லாம் கலந்த கதம்ப வாசனை இதயத்தோடு கலந்து, மனத்தில் பக்திப் பரவசத்தை மூட்டியது. கனகவல்லி அம்மாள் சாம்பிராணித் தூபம் காண்பித்து, நிவேதனம் பண்ணினுள். வரிசையோடு நின்றிருந்த குழந்தைகள், பக்திப்பாடல்களைப் பாடத்தொடங்கினர். முதலாவதாகப் பிள்ளையார் துதி 'பாலும் தெளிதேனும்' பாட்டைத் தொடங்கி, அடுத்து லக்ஷ்மி ஸ்தோத்திரம், சரஸ்வதி வழிபாடு, முருகன் துதி, அடுத்தடுத்துப் பாடினுர்கள். அடுத்தது 'வேயுறு தோழி பங்கன்' பாட்டு.

தாயார் மாலையில் கூறிய வார்த்தைகளை, நினைவில் கொண்டிருந்த கமலபதி பூஜை சமயத்திலும், வாசற்புறத்தில் ஒரு கண்ணுகவே இருந்தான். அதாவது வீட்டுக்குக் காவலாக நின்றிருந்த கமலபதி திடீரென்று, ''ஐயோ அம்மா, ஐயோ அம்மா...திருடன்..திருடன்..'' என்று அலறத் தொடங்கினுன். அந்திமயங்கி இருள் கவியும் நேரம். ஜனசந்தடி ஓரளவு தடைப்பட்டிருக்கும் நேரம்.

திடீரென்று அண்ணன் அலறத் தொடங்கவே பக்கத்தில் நின்றிருந்த தம்பி தங்கைகளும் பதறிப்போய் அலறத் தொடங்கி விட்டார்கள். குழந்தைகளெல்லோரும் வாசற்புறத்தைப் பார்த்து அலறியதைக் கண்ட தாயார் பதை பதைப்புடன் கையிலிருந்து தூபக்காலை அப்படியே வைத்துவிட்டு, 'என்னடா, என்னடா?'' என்று அழும் குழந்தைகளைப் பதற்றத்தோடு வினவினுள். குழந்தைகள் ஏதாவது பதில் சொன்னுல்தானே? குழந்தைகளுக்கு மேலே அவள் குழறிக்கொட்டவே அக்கம் பக்கம் கூடிவிட்டது.

ஜனங்களைக் கண்டதும் அவளுக்குச் சற்று தெம்பு வந்தது. வந்தவர்கள் பலரும், ''என்ன நடந்தது? யார் வந்தது?'' என்று கேட்கவே, கமலபதி தன்னைச் சுற்றித் திடப்படுத்திக்கொண்டு,''மூகமூடித் திருடன்..'' என்று அழுதுகொண்டே முடித்தான். அவ்வளவுதான்; ஆளுக்கொரு மூலையாக வீட்டுக்குள் புகுந்து தேடத் தொடங்கினுர்கள். வாசற்படியில் எட்டிப் பார்த்ததும், வீட்டினுள்ளிருந்து அலறல் எழுந்ததும் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவிட்டான் திருடன் என்பதை விக்கலும் விம்மலுமாய்ச் சொல்லி முடித்தான் கமலபதி. வந்தவன் எப்படி யிருந்தான், என்ன உடை அணிந்திருந்தான் டிராயரா,பைஜாமாவா? என்ன நிறத்தில் வேட்டி? இவ்வாறு ஆயிரம் ஆயிரம் கேள்விகள்!

எதற்கும் பதில் சொல்ல முடியாத கமலபதி, ''அதெல்லாம் நான் கவனிக்கவில்லை. முகத்தின் பயங்கரத்தைக் கண்டதும் அலறிவிட்டேன்'' என்று சொன்னுன். சிறுபிள்ளை கமலபதி. இவனுடைய பதிலைக் கேளாத ஒருவர் முன் கட்டுக்குள் புகுந்து அதற்குள்ளாக இருந்த அறையை எட்டிப் பார்த்தார். பெரிய கட்டி

லுக்கு அடியிலே இருந்த பெட்டி யின் பின்னல் சிறு கால்கள்!

''இதோ திருடன்'' என்றதும் அங்கே உஷாராகக் கூட்டம் அலே மோதிக்கொண்டு வந்தது.

திருடனேக் கண்டு கூட்டம் பயந் ததுபோல அந்தத் திருடனும் பயந்து, வியர்த்து விறுவிறுத்து, அழுதுகொண்டே வெளியே வந் தான். அவன் வயது பன்னிரண்டு.

''இந்த வயதிலா திருட்டுப் புத்தி?'' என்று ஓங்கி அடிக்கப் போனபோது, கமலபதி திருடனேப் பார்த்துவிட்டு, ''ஐயோ அவனே அடிக்காதீங்க. அவன் என்னேட நண்பன்'' என்று கத்தினன்.

எல்லோரும் திடுக்கிட்டார்கள். திருடன் எவ்வாறு நண்பன் ஆனன்? குழந்தைகள் விளேயாட்டை நம்பி ஏகப்பட்ட கூட்டம் வரவே அவர் களுக்குக் கோபம் வந்தது.

''இவன் என் நண்பன்தான்'' என்று சொன்னதை ஆமோதித்து விடுதலே தந்தபோது, உள்ளே கிடந்த முகமூடியை ஒருவர் எடுத் தார். அது, முகத்திற்கு விளேயாட்டு வேஷங்கள் தருகின்ற அட்டை முகமூடி. அந்த முகமூடியை அணிந்து நண்பனேப் பயம் காட்ட வந்த இடத்தில் இவ்வாறு ஆபத்து வரவே பயந்து ஒட்டிக்கொண் டான் என்று எல்லோரும் புதிரை விளக்கினர்கள்.

ஆனல் அப்போதுதான் புதிய புதிரே பிறந்தது. தெருவில் ''உதையுங்கள், அடியுங்கள்; கொல் லுங்கள்'' என்று சொல்லுக்குச் சொல் வேகமாகக் கத்திக்கொண்டு வந்தார்கள். யாரோ ஒரு முரடன் திமிறிக்கொண்டு வந்தான். அவன் பார்வையே பயங்கரமாக இருந் தது. அந்தக் கூட்டத்தில் போலீஸ்



காரர் ஒருவர் குண்டாந்தடியைச் சுழற்றிக்கொண்டு வந்தார்.

கூட்டத்தின் பார்வை போலீஸ் காரர் பக்கம் திரும்பிற்று. நாலைந்து பேர் பிடியில் போராடி னன் ஒருவன். அவன் நிஜத் திருடன். 'நடந்தது என்ன?' என்று ஒவ்வொருவரும் ஆவலோடு கேட்டார்கள். கூட்டம் அமைதி யாக இருந்தது. போலீஸ்காரர் சொல்கிறார்:

''இங்கே குழந்தை - குட்டிகள் திருடன் திருடன், என்று கத்திய தும் நானும் வந்தேன். அதே சம யம் பக்கத்து வீட்டுக்குள்ளிருந்து இந்த முரட்டு ஆள் சுவர் தாண்டி ஓடினன். ஒரு சிலர் உங்கள் வீட் டுக்குள் வந்தபோது,இன்னும் சிலர் இவன் பின்னல் ஓடினர்கள். இவனை நாலாவது தெருவரை துரத்திக் கொண்டு வருகிறேம். எங்கே, உங்கள் வீட்டுக்குள் ஒளிந்துள்ள பட்டப் பகல் திருடன்?''

கமலபதியின் அருகே நின்ற சிறு வனுக்கு உதறல் எடுத்தது. ''நான் திருட வரவில்லை. முகமூடியைப் போட்டு என் நண்பனைப் பய முறுத்த வந்தேன். அவன் பயந்து கலாட்டா செய்யவே நானே பயந்து ஒளிந்து கொண்டேன்'' என்று நடுங்கினன்.

''அட கள்ளப் பயலே, நீ முக மூடியைப்போட்டு வந்து என் திருட்டைக் கெடுத்துவிட்டாயே'' என்று ஓங்கி ஒரு குத்து விட் டான் நிஜத் திருடன். நல்லவேளை யாக அந்தக் குத்தைப் போலீஸ் காரர் தாங்காதுபோனல் முகமூடி அணிந்த வீரன் எலும்பாகப் போயிருப்பான்.

''டேய், அவன் விளையாட்டுத் திருடனைப்போல வந்த நல்ல வேளையில் நீ அகப்பட்டுக்கொண் டாய்; நடடா!'' போலீஸ்காரன் நிஜத் திருடனை அழைத்துச் சென் ருன்.

தெருவே, முகமூடித் திருடனை வாயாரப் புகழ்ந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள் சினிமாவிலிருந்து வந்தவர்கள், அவனைப் பெரிதும் பாராட்டினர்கள். அந்த வருஷம் முகமூடித் திருடனுக்கு வேஷ்டி துணிமணிகளும் வெடி மத்தாப்பு களும் பரிசாக வாங்கிக் கொடுத் தார்கள். மறுநாள் நிஜத் திருட னுக்கு ஜெயில் வாசம் கிடைத்த தாகப் பத்திரிகையில் செய்தி வெளி வந்தது.



''ஏண்டா! அந்தக் கிட்டு உன்னை அடிச்சான்னு வந்து சொல்றயே, அவனைத் திருப்பி அடிக்க உனக் குத் தெரியல்லியே! நான் கத் துத் தரட்டுமா? உம்....''

''டேய்! டேய்! வேண்டாம், வேண்டாம், நான் அவனை அடிக்கவே இல்லை. நீ பேசாமெ இரு....போதும்.''

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

முஸ்தபா கமால், அரவக்குறிச்சி

கே: நயா பைசா முறைப்படி கண்ணன் விலை எவ்வளவு?

ப: பன்னிரண்டு நயா பைசாவாகும்.

க. ராஜாராமன், திண்டுக்கல்

கே: திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் விலாசம் அவசியம் தேவை. தர முடியுமா?

ப: காரியதரிசி, திருச்சி எழுத்தாளர் சங்கம் 5, பட்டாபிராம பிள்ளைத் தெரு, தென்னூர், திருச்சிராப்பள்ளி.

மா. வீராசாமி, ஆம்பூர்.

கே: விமானம், கார், கப்பல் முதலியன தயாரிக்கும் நாடுகளில் முதலிடம் பெறும் நாடுகள் யாவை?

ப: அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், ஜப்பான்.

க. ராக்கையா, மத்துநட்டை (இலங்கை)

கே: என் அண்ணனுக்குத் திக்குவாய் அதிகமாக இருக்கிறது. அது நீங்குவதற்கு வழி இருக்கிறதா?

ப: இருக்கிறது. சிறு வயசில் பேசத் தொடங்கும்போதே சரியாகப் பேச ஆரம்பிக்காததால் திக்குவாய் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். அதற்குக் கடினமான பயிற்சி ஒன்று இருக்கிறதாம். ஒரு வருஷம் கிடுகிடென்று பேசப் பழகினால் திக்குவாய் விலகிவிடுமாம். எத்தனையோ கடுமையான திக்குவாய்க்காரர்கள் எல்லாம்கூட நல்ல சொற்பொழிவாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

பொட்டையன், சிறுவாங்கூர்.

கே: வரப்போகும் பொதுத் தேர்தலில் யாருக்கு அதிகம் ஓட்டுகள் கிடைக்கும். தியாகம் செய்தவர்களுக்கா, பணம் மிகுந்தவர்களுக்கா?

ப: பணம் மிகுந்தவர்களுக்குத்தான்; பணத்தினால் மணிக்கணக்காகப் பேசத் தெரிந்தவர்களைக்கூட விலைக்கு வாங்கிவிட முடியும். செயலைவிட, பேச்சுக்குத்தானே இப்போது அதிக மதிப்புக் கொடுக்கப்படுகிறது?

என். ரங்கவாஸ், பழனி.

கே: படித்த மாணவனுக்கும் படிக்காத மாணவனுக்கும் வித்தியாசம் என்ன?

ப: படித்தவன் தெரியாதது போல் பாசாங்கு செய்கிறான். படிக்காதவன் எல்லாம் தெரிந்தது போல் பாசாங்கு செய்கிறான்.

வீ. காசிநாதன், ஆண்டிப்பட்டி அஞ்சல்

கே: டக் டக் டக் டக் டக்.. புரிகிறதா?

ப: கட் கட் கட் கட் கட்.... சரிதானா!

எம். எஸ். சுப்பிரமணியன், ஆரணி (வ. ஆ.)

கே: நேருவுக்குப் பின்னால்..?

ப: நேருவுக்குப் பின்னால் ஒன்றுமில்லை; முன்னால் பண்டிதர் என்று இருக்கவேண்டும்.

எஸ். பழனிவேலு, பட்டுக்கோட்டை

கே: தமிழ் நாடு என்று தனி நாடு ஏற்பட்டுவிட்டால் இப்போது குறைகூறும் கட்சிகள் கலைந்துவிடுமா?

ப: இரண்டும் நடக்காத காரியங்கள். உனக்கு ஏன் இந்தக் கேள்விகள்?

ஜே. துவாரகன், திருச்சி-1

கே: நேதாஜி உயிருடன் இருக்கிருரா? அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: நேதாஜி இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் பெயர் புகழோடு வாழ்கிறது. அதற்குச் சாவு இல்லை.

கோவை-கண்ணன்

கே; இந்தியாவில் சிறந்த அரசியல் விஞ்ஞானி, சிறந்த தலைவர், சிறந்த அறிவாளி, சிறந்த நடிகர்..

ப: சி. வி. ராமன், நேரு, ராஜாஜி, பலர்.

எஸ். ஆர். முத்துகிருஷ்ணன், அம்பத்தூர்

கே: கண்ணன் பத்திரிகையை வாரப் பத்திரிகையாக மாற்றக் கூடாதா என்றதற்கு இயலும்; ஆனல் அவசியமா என்பதுதான் கேள்வி என்று பதில் அளித்தீர்கள். ஒருவர் அவசியமில்லாமல் கேட்க மாட்டார். நானும் அதையே கேட்கிறேன், வாரப் பத்திரிகையாக்கக்கூடாதா என்று.

ப: நானும் அதையேதான் திரும்பக் கேட்கிறேன். அவசியம் என்ருல் என்ன அவசியம் என்று.

ஆர். கண்ணன், ஹைதராபாத்

கே: தேள் முட்டையிடுமா, குஞ்சு பொரிக்குமா?

ப: குஞ்சு பொரிக்கும்.

வி. பி. கேசவன், பங்களூர்-3

கே: சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி இவைகளிலிருந்து புறப்படும் இரவு விமானங்கள் சந்திக்கின்றனவா?

ப: சந்திக்கின்றன; நாகபுரியில்,

ர. தணிகாசலம், கடலூர்

கே: உங்களுக்கு நண்பர்கள் அதிகமா, விரோதிகள் அதிகமா?

ப: நண்பர்கள் எல்லாரும் ஒரு நாள் விரோதிகளாகவும் விரோதிகள் எல்லாரும் திடீரென்று நண்பர்களாகவும் மாறுகிற இந்த நாளில் எனக்கு யார் அதிகம் என்று சொல்ல முடியவில்லை.

அப்பாத்துரை, சென்னை-3

கே: சைனு சு-சூவில் வரும் சினனைப் போலத் திடீரென்று உங்களுக்கு அத்தனை செல்வம் கிடைத்தால்-?

ப: கிடைக்காது; கிடைத்தால் முதலில் இந்த மாதிரிக் கேள்விகளுக்குப் பதில் கூற வரமாட்டேன்.

பி. தனலட்சுமி, பம்பாய்-19

கே: உலகத்திலேயே முதல் முதல் ரெயில்வே ஏற்பட்டது எங்கே? எந்த வருஷம்?

ப: இங்கிலாந்தில்; 1825-ஆம் வருஷம்.

அ. அரசு, பெரம்பூர்

கே: நீங்கள் டிக்கட்டில்லாமல் எப்போதாவது ரெயிலில் பிரயாணம் செய்திருக்கிறீர்களா?

ப: எப்போதாவது என்ன? மூன்று வயது வரையில் பலதடவை அப்படிப் பிரயாணம் செய்திருக்கிறேன்.

குமாரி செல்வம், கோவை

கே: ஆகாயத்தில் தோன்றும் வானவில்லின் நீளம் சுமார் எவ்வளவு மைல்?

ப: ஆகாயத்தில் வானவில் தோன்றும் தூரம் 9 கோடியே முப்பது லட்சம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் நீளத்தைப் பற்றி விஞ்ஞானிகள் விவாதம் தீர்ந்தால்தான் சொல்ல முடியும்.

கே. கே. தங்கம், கும்பகோணம்

கே: சிலர் மட்டும் பளபளவென்றும் அழகாயும் இருக்கக் காரணம் என்ன?

ப: உடல் ஆரோக்கியமே முக்கிய காரணம். பாலும் பழமும் அதிக அளவில் சேர்ப்பதால் சரும அழகு அதிகரிக்கிறதாம். உள்ளத்தில் மகிழ்ச்சியும் இருந்தால்தான் இவை நிலைக்கும்.

கே: சென்னையில் திரும்பத் திரும்பப் பார்க்கக் கூடியது எது? ஒரு தடவையாவது பார்க்க வேண்டியது எது?

ப: பார்க்கக் கூடியது கூவம்; பார்க்கவேண்டியது கடற்கரை.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

வாளாடி (திருச்சி ஜில்லா)	உபதலைவர்: A. S. கோபாலன் காரியதரிசி: P. லக்ஷ்மிநாராயணன் பொருளாளர்: V. M. மணியன்

பன்னிரண்டு பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'வெண்ணிலா' என்ற மாதாந்தரக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப் படுகிறது. கதைகள் முதலியன, A. S. கோபாலன், 1-97, ஒற்றைத் தெரு, வாளாடி என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

ஸ்ரீராமசமுத்திரம் (திருச்சி ஜில்லா)	உப தலைவர்: M. கிருஷ்ணமூர்த்தி செயலாளர்: இள. முருகன் பொருளாளர்: N. முத்துகிருஷ்ணன்.

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. அழகரசன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'அல்லி' என்ற கையெழுத்துப் பத்திரிகை மாத மாதம் வெளிவருகிறது. கதைகள், ஆசிரியர் 4-46 மாரியம்மன் தெரு, ஸ்ரீராமசமுத்திரம் என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்,

ஓனம்குளம்	உப தலைவர்; தமிழ்ச் செல்வன் செயலாளர்: R. ராமகிருஷ்ணன் பொருளாளர்: R. ராமராஜ்

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'வெண்ணிலா' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. தமிழ்ச் செல்வன், ஓனம்குளம் கிராமம், இளவேலங்கால் அஞ்சல் கோவில்பட்டி தாலுக்கா என்ற விலாசத்துக்குக் கதைகள் அனுப்பலாம்.

பாலக்காடு	உபதலைவர்; S. A. M. ஹுசைன் செயலாளர்; நாஜா முதீன் பொருளாளர்; K. A. கமருதீன்

எட்டுப் பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'கட் கட்' என்ற மாதக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. 'ராஜா லைப்ரரி' என்ற நூல் நிலையமும் நடத்தப்படுகிறது. கதைகள் அனுப்ப விலாசம்; மாஸ்டர் S. A. M. ஹுசைன். ராஜா லைப்ரரி,15/281, நூரணி ரோடு, பாலக்காடு.

பேனு நண்பர்கள்

1. T. ஏகாம்பரம், 2. முகமதியர் தெரு, புதுப் பாளையம் கடலூர். N. T.
2. A. ஸ்ரீநிவாஸன், 63, மேட்டுத்தெரு, கீழ வாசல், ஸ்ரீரங்கம்.
3. K. M. சபாபதி, R. M. பாண்டியன், M. G. கபிலதாஸ், T. பாமா மணாளன், 'வளர்மதி மன்றம்' 45/7 செக்கடி தெரு, கோவில்பட்டி.
4. K. தேவகுமார், C/o K. குமாரசாமி, 130, லலிதா நகர், சாந்தோம், சென்னை - 4
5. A. B. ரகுநாத், C/o A. R. ராமசந்திர ராவ், 59, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன்.
6. G. M. அல்டாப், 7/299, அகமது லாட்ஜ், தர்மபுரி.
7. T. S. வாசுதேவன், C/o T. ஸ்ரீநிவாஸன், B. A., 678, நானாபேட், பூனா - 2.
8. M. வேங்கட ரமணி, C/o S. மகாலிங்கம், 150/2 சோமவார் - பேட், பூனா - 2

6. N. தர்மலிங்கம், 41, நுவரெலியா ரோடு, வெலிமடை, இலங்கை.

10. S. பொன்னையா, சந்தியடி. தோப்பூர் (கி. மா.) இலங்கை.